அறைவு 04 இயம் 34 March 26 - April 01, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS

LIFE SKILL

UK SPONCER VISA

CALL: 0770203201



HELLO MOBILE WORLD

122, NC Road

Trincomalee

0777154663 - 0712674050

# கப்பல்துறையில் அடிதடி

## "கஞ்சா" காரணமா??

கப்பல்துறை தமிழ் கிராமத்தில் நிகழ்ந்த தடியடியில் பல இளைஞர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று கடந்தவாரம் நடைபெற்றுள்ளது.


இரண்டு சிறுவர்களுக் கிடையே நடைபெற்ற முரண்பாட்டைத் திட்டமிட்டுப் பெரிதாக்கி நடத்தப்பட்ட தாக்குதல்களாலேயே இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகக் கடந்த இரண்டு வருடங்கள் இருந்தவரை நீக்கிப் புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்ய முயன்றதே அடிப்படைப் பிரச்சனையாக இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்ற...

பக் 17

## சம்பூரில் நீண்டகாலம் குடியிருக்க முடியாது

### சூழலியலாளர்கள் எச்சரிக்கை




சம்பூரில் அன்மின் நிலையம் இயங்குமாயின் அப்பிரதேசத்தில் மக்கள் நீண்டகாலம் குடியிருக்கமுடியாத நிலை தோன்றும் என சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார வளங்களைச் சிதை - வடையச்செய்யும் அனல்மின் - நிலையமானது மக்கள் குடியி - ருக்காத காலத்தில் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் அறிக்கையை வைத்தே உருவாக்கப்பட்டதெனவும், அந்த அறிக்கையானது தற்போது செல்லுபடியாகாது எனவும் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சம்பூர் மக்களால் சம்பூர் அனல் மின் நிலையத்தை

பக் 17



பல பத்து ஏக்கர் தமிழ் மக்களின் காணிகளில் அமைக்கப்பட்டிருக்கும் கப்பல்துறை கடற்படை முகாம்



# சிறீலங்காவின் இழந்து போன தலைமுறை



பாகிஸ்தானிய ஊடகவியலாளர் முபாசிர் நூர்

பக் 17

## "இரண்டு பிரச்சனைகளே ஏற்படும்"

### அனல்மின் நிலையம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



சம்பூரில் அரச கடற் படையால் கையகப் - படுத்தப்பட்டிருந் 177 ஏக்கர் காணிகள் நேற்று மக்களின் பாவனைக்காக விடுவிக் கப்பட்ட போது கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் இரா சம்பந்தன் சம்பூரில் அமைக்கப்படவிருக்கின்ற அனல் மின்நிலையத்தால் இரண்டு வகையான பாதிப்புகள் மட்டுமே நிகழும்

பக் 17

## இடமாற்றத்தை ஏற்காதுவிட்டால் கட்டாய ஓய்வு

குச்சவெளி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் குறைபாடுகளை நிவர்த்திக்கும் முகமாக, எதிர்வரும் இரண்டு கிழமைகளுக்குள் ஆசிரியர்களை நியமிக்குமாறும் அங்கு நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் அங்கு செல்ல மறுத்தால் கட்டாய விடுமுறையில் அனுப்புமாறும் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ உத்தரவிட்டார் .

திருகோணமலை குச்சவெளி பிரதேச மாணவர்களின் ஆர்பாட்டம் தொட்டர்பாக நேற்று (23) பிற்பகல், ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ தலைமை - யில் விசேட கூட்டமொன்று......

பக் 17

யாசிம் , ஹலீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## நலிவடைந்த தரப்பாக மாறும் தமிழினம்!

இரு பத்தாண்டுகளுக்கு மேலாக நீடித்த போரின் வடுக்களைச் சுமந்து வாழ்பவரும், தமது தாயகப் பிரதேசத்தைச் ஸ்ரீலங்காவில் கொண்டுள்ள ஈழ தேசிய தமிழினத்தின் தலைவிதியைத் தீர்மானிப்பவர் யார்? என்ற கேள்வி எம்முன்னே கடந்த ஏழு ஆண்டுகளாக விடைகாண முடியாது இருக்கின்றது.

ஏழு ஆண்டுகளுக்கு முன்னரான காலப்பகுதியில் சர்வதேச அரங்கில் ஸ்ரீலங்காவினால் முன்னெடுக்கப்பட்ட பிரசார உத்தியில், தமிழர் தாயகத்தில் நடைபெற்று வந்த ஆயுதப் போராட்டமானது உலகின் உச்சப் பயங்கரவாதப் பண்புகளைக் கொண்டிருப்பதனால் அதனை அழித்தொழித்தாலன்றி எவ்விதமான சமாதானத்தையும், அமைதியான நிலைத்த வாழ்வையும் தமிழ் மக்களுக்கு வழங்க முடியாது என்பதாகவே இருந்தது.

தெற்காசியப் பிரதேசத்தில் தமது இருப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்திருந்த மேற்குலகுகிற்கு இத்தகவலானது கரும்பானது.

உலக சனத்தொகையுடன் ஒப்பிடும் போது புறக்கணிக்கத்தக்க எண்ணிக்கையைக் கொண்ட ஈழத்தமிழினத்தின் போராட்டத்தை ஒடுக்குதல் என்பதன் ஊடாக கிழக்காசியாவின் வலுமிக்க நாடும், உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்கப் பொருளாதாரத்தையே ஆட்டம் காண வைக்கும் உத்வேகத்துடன் இருக்கும் நாடுமான சீனாவுடன் அன்றைய ஸ்ரீலங்காவின் ஆட்சியாளர்கள் கொண்டுள்ள உறவையை அறுத்தெறிந்து மேற்குலகின் காலடிகளில் ஸ்ரீலங்காவை வீழ்த்துவதற்கான சந்தர்ப்பமாகத் தமிழர் போராட்டத்தை ஒடுக்குதல் என்ற நடவடிக்கையை "உலகப் பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" என்ற வரையறைக்குள் கொண்டு வந்து தமிழினத்தைக் கருவறுப்புச் செய்ய மேற்குலகும் துணை போனது.

அதனூடாகத் தான் நினைத்ததை மேற்குலகு அடைந்து கொண்டதுடன் ஸ்ரீலங்கா உட்பட ஆசியாவின் பலநாடுகள் தாம் நினைத்ததை அடைந்துகொண்டன.

முடிவில் தாம் நினைத்ததையோ, அல்லது சர்வதேசச் சட்டங்களின் படித் தமக்குச் சேர வேண்டியதையோ அடையாமல் உச்ச அழிவை எதிர்கொண்டு, ஆட்பல, பொருளாதார, கல்வி கலாசார அழிவுகளை எதிர்கொண்டு நலிந்தது ஈழத்தமிழ் இனம்.

எனினும் அந்த நலிவின் போதும் ஈழத்தமிழினமானது தலைநிமிர்ந்து வாழத்தக்கதான வாய்ப்பொன்றைப் பெற்றிருந்தது.

அந்த வாய்ப்பானது சர்வதேசச் சட்டப் பொறிமுறைக்குட்பட்ட வகையில் ஒரு இனம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் பாதுகாப்பு அரண்களின் பாற்பட்டிருந்தது.

அதாவது சர்வதேசச் சட்டங்களின் படி இனஅழிப்பை எதிர்கொண்டுள்ள இனமானது தனது இருப்பைப் பாதுகாத்துக்கொள்ள மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை அனுபவிக்கும் வாய்ப்பு தமிழினத்திற்கு உருவாகியிருந்தது.

ஈழத் தமிழினம் இனஅழிப்பை எதிர்கொண்டது என்பதை சாற்றுகளுடன் வடமாகாண அரசு சர்வதேசச் சட்டநியதிகளுக்கு உட்பட்டு தனது பிரேரணையாக நிருபித்திருந்தது.

எனினும் அதனைத் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்ளத் தவறினர். தமக்கு இழைக்கப்பட்ட அநீதி இனஅழிப்புத்தான் என்பதையிட்டு அவர்கள் தெரிந்துகொள்ளத் தயங்கினர். அதனையிட்டு அலட்டிக்கொள்ளத் தயாராகாமல், அதனைப்பற்றிப் பேசாமல், இணக்க அரசியலே தமக்குப் போதுமானது என்பதை முன்வைத்தவர்களைத் தமது அரசியல் தலைமைகளாகத் தேர்வு செய்தனர்.

இதற்கு முன்னர் மிக முக்கியமான விடயமாக உன்றைக் கருத்திற்கொள்ள வேண்டும். உலகச் சனத்தொகையில் புறக்கணிக்கத்தக்க விகிதத்தைக் கொண்ட தமிழினத்தினால் ஆயுதப் போரொன்று கடந்த பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டமைக்கு ஆணி வேராக இருந்தது தமிழ மக்கள் வழங்கிய ஆதரவேயன்றி வேறு ஒன்றும் இல்லை. இந்நிலையில் அந்த ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கக் காரணமான வட்டுக்கோட்டைத் தீர்மானமானது தனிநாடுதான் தமிழர்களுக்குத் தீர்வாகும் என அறிவித்தது. பின்னர் திம்புப் பேச்சுக்களின் போது தனிநாடு என்பது பிரிவினை என்பதனால் அதனை விடுத்து தனித்தேசம் என்பதைத் தமிழ் தரப்புக்கள் முன்வைத்தன.

இன்று அவையனைத்தையும் கைவிடுவதற்குத் தயாரென்று வெளிப்படையாகவே தமிழ்த் தலைமை அறிவித்திருப்பதானது தமிழ் மக்களின் சரணாகதியா? என்று கேள்வி எழுகின்றது.

அழிவுகளில் இருந்து உயிர்த்தெழுதல் உலகின் இயற்கையான பிரசவம். அதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கும் இனமாகத் தமிழினம் மாற்றமடைந்து வருவதால் அந்த இனம் நலிவடைந்து செல்தல் சாத்தியமாகத் தொடங்கியிருக்கின்றது போலத்தான் இருக்கின்றது.

## நூல் வெளியீடு

உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.செ.லோகராஜா எழுதிய " நிலவே முகம்காட்டு" என்னும் கவிதைத் தொகுதி எதிர்வரும் 29.03.2016 அன்று மாலை 3 மணிக்கு மூதூர் ஸ்ரீ சண்பகா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. அதிபர் வி. அருள்நேசராசாவின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் ச.அருளானந்தம் "கேணிப்பித்தன்" அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.


நூலாசிரியரைப் பற்றி கவிஞர் சேனையூர் இரத்தினா (இ.இரத்தினசிங்கம்), நூல் அறிமுகத்தினை வள்ளுவர் வித்தியாலய அதிபர் திரு.ப. மதிபாலசிங்கம், நூல் நயவுரையை இலங்கைத்துறைமுகத்துவாரம் இந்துக் -கல்லூரியின் பிரதி அதிபர் திரு.சி. கணேசன், நன்றியுரையை சிவானந்தா கனிட்ட வித்தியாலய அதிபர் திரு. க. ரங்கநாதன் ஆகியோர் நிகழ்த்த, ''பதிப்பகத்திலிருந்து'' என்னும் சிறப்புரையை சிறிராம் பதிப்பகத்தின் உரிமையாளர் ''மாயன்'' இரா.ஸ்ரீஞானேஸ்வரன் நிகழ்த்த உள்ளார்.

ஏற்புரையினை நூலாசிரியரும், சோதிடக் கலைமாமணியும், "கலைமாறன்" என பட்டமளிக்கப் பட்டவருமான செ. லோகராஜா வழங்குவார். நிகழ்ச்சித் தொகுப்பினை மாவடிச்சேனை வித்தியாலய அதிபர் திரு.இரா. சச்சிதானந்தம் அவர்கள் நிகழ்த்துவார். ஈச்சிலம்பற்று கோட்டக் கல்வி அதிகாரிகள் சங்கம், வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் கல்வி மேம்பாட்டுச் சபை, ஈச்சிலம்பற்றுக் கோட்ட ஆசிரியர்கள் சங்கம் ஆகியன இணைந்து இவ் வெளியீட்டு விழாவை நிகழ்த்துவது குறிப்- பிடத்தக்கது.

## கொடியேற்றம்

திருக்கோணேஸ்வரர் கோவிலின் வருடாந்தப் பங்குனி உத்தர மகோற்சவம் கடந்த 23ம் திகதி ஆரம்பமாகியது.

(அச்சுதன்)



## ஆரோக்கியக் கருத்தரங்கு

தி - உவர்மலை மூத்த பிரசைகள் நலன்புரிச் சங்கம் உவர்மலையில் வாழும் மூத்த பிரசைகளின் நலன் கருதி முதுமையில் ஆரோக்கியமாக வாழ்தல் தொடர்பான கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்துள்ளது.

கிழக்கு மாகாணச் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் உதவியுடன் நாளை 27ம் திகதி பிற்பகல் நான்கு மணிக்கு விவேகானந்தாக் கல்லூரியில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

சுதேச வைத்தியத்துறை மருத்துவர் செ.போல்ரன் ரஜீவ் இக்கருத்தரங்கை நடாத்தவுள்ளார். அனுமதிகள் இலவசம்.

(விதுஷா)

## சேவை நலன் பாராட்டு விழா



சேனையூர் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு.இ.இரத்தின சிங்கம் அவர்களின் சேவைநலன் பாராட்டு விழா கடந்த வாரம் நடைபெற்றது.

கடந்த பன்னிரண்டு வருட காலமாக அதிபராகச் சேனையூர் மத்திய கல்லூரியிற் பணியாற்றிவந்த அவர் மாணவனாக, தொண்டராசிரியராக, ஆசிரியராக, அதிபராகவென 32வருட காலம் தனது வாழ்வில் சேனையூர் மத்திய கல்லூரியில் கழித்திருப்பது முக்கியமானது.

அண்மையில் பணியோய்வு பெற்ற அதிபருக்கான பாராட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.துரைரெட்ணசிங்கம் இறுதிப் போரின்போது அழிவடைந்த பாடசாலையை மீளக்கட்டியெழுப்பியதில் முன்னாள் அதிபர் இரத்தினசிங்கத்தின் பங்கு அளப்பரியது எனத் தெரிவித்திருந்தார்.

பாடசாலையில் தற்போதைய அதிபர் திரு. செ.சிறீதரனின் தலைமையில் நடை -பெற்ற இந்நிகழ்வினை பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உட்பட்ட பாடசாலைச் சமூகம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் ஜனாப் நவாஸ், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.உதயகுமார் ஆகியோரும் கலந்திருந்தனர்.

## "வீடுகளைக் காணவில்லை"
### சம்பூர் மக்கள் கவலை

எங்களுடைய இடங்களுக்கு வந்து பார்க்கும்போது வீடு, கிணறு மற்றும் மலசல கூடங்களை காணவில்லை என தங்கள் சொந்த இடங்களைப் பார்வையிட்ட சம்பூர் மக்கள் ஊடகங்களுக்கு கருத்துக்களை தெரிவித்தார்கள்.

திருகோணமலை சம்பூரில் நடைபெற்ற யுத்தத்தினால் இடம்பெயர்ந்து பத்து வருடங்களில் பின் எமது சொந்த இடத்தினை பார்வையிட்ட போது, எங்களது வீடுகளை இருந்த இடத்தில் காணவில்லை என சம்பூர் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பூரில் மக்களுக்கு சொந்த காணி மீள கையளிக்கப்பட்டு அவர்களுடைய இடங்களை பார்வையிட்ட அவர்கள் மேலும் தெரிவிக்கையில்!

"நாங்கள் 2006ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களுக்கு சென்று அகதி முகாம்களில் வாழ்ந்தோம். எங்களது இருப்பிடங்களை இழந்த நிலையில் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

எனவே எங்களுடைய இடங்களுக்கு வந்து பார்க்கும் போது வீட்டை காணவில்லை, கிணற்றை காணவில்லை, மலசல கூடங்களை காணவில்லை. சிலருக்கு இவை இருக்கின்றது. சிலருக்கு இல்லை என்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மலைமுரசு
MALAIMURASU

# இலங்கைச் செய்திகள்

## மூன்றாம் நபரிடம் செல்லும் நிர்வாகப் பொறுப்பு – ஐ.தே.கட்சி

ஐக்கிய தேசிய கட்சியின் நிர்வாக பொறுப்பை கட்சியின் முதல் மற்றும் இரண்டாம் தர குழுக்கள் அரசாங்கத்தின் அமைச்சர் பதவிகளை வகிப்பதன் காரணமாக கட்சியின் மூன்றாம் தரப்பிடம் கையளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் உயர்மட்ட தகவல்களை கோடிட்டு கொழும்பின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்வதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் தரப்பினர் பொறுப்புடன் செயலாற்ற வேண்டியுள்ளது. இதன்காரணமாக, கட்சியின் செயற்பாடுகளை துரிதமாக முன்னெடுப்பதற்காக மூன்றாம் தரப்பிற்கு பொறுப்புக்களை கையளிக்க ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.



இதற்கமைய, ராஜாங்க அமைச்சர்கள், அமைச்சு பதவி வகிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர்கள் உள்ளிட்டவர்களுக்கே இந்த பொறுப்புக்கள் கையளிக்கப்படவுள்ளன.

## தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்

தமது பூர்வீக நிலங்களை விடுவிக்குமாறு கோரி முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு பகுதி மக்கள் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கேப்பாப்பிலவு பகுதி மக்கள் கடந்த வியாழக்கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது பூர்வீக நிலங்களை விடுவிக்குமாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள ஆறுமுகம் கணபதிப்பிள்ளை எனும் நபர் சாகும் வரை உண்ணாவிரதத்தை முன்னெடுத்துள்ளதுடன் கேப்பாப்பிலவு மக்கள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

## மாணிக்க கல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

பொகவந்தலாவை பிரிவுக்குட்பட்ட கெசல்கமுவ ஓயா ஆற்றுப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஏழு பேரை ஹட்டன் காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர். இதன் போது, மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் கைப்பற்றியதாகவும் மேலும் தெரிவித்தனர். இச்சந்தேக நபர்கள் பலாங்கொடைப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

## மரண சான்றிதழை பெறுமாறு நிர்ப்பந்திப்பு- மகேந்திரன்



காணாமல் போனவர்களை தேடிக்கண்டறியும் குழுவின் செயலாளர் மகேந்திரன் ஐ.பி.சி தமிழ் செய்திக்கு வழங்கிய தொலைபேசி நேர்காணலின் போது, காணாமல்போனவர்கள் தொடர்பான மரண சான்றிதழை பெற்றுக் கொள்ளுமாறு காணாமல் போனவர்களின் உறவினர்களிடம் பரணகம ஆணைக்குழு நிர்ப்பந்திப்பதாக பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்தார்.

காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணைசெய்யும் மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் வாய்மொழிமூல விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த விசாரணைக்காக வருகைதரும் காணாமல் போனவர்களின் உறவினர்களிடம் ஆணைக்குழுவினர் சில வினாக்களை எழுப்பி உளரீதியாக அவர்களை குழப்பமடையச்செய்வதாக மகேந்திரன் குற்றம் சுமத்தினார்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு காணாமல் போனவர்களின் விசாரணைகளை மறைத்துவிடுதல் அல்லது முடிவுக்குகொண்டுவரும் திட்டத்தில் ஆணைக்குழுவினர் செயற்படுவதாக மேலும் கூறினார்.

இதேவேளை காணாமல் போனவர்களுக்கு காணாமல் போனமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் வழங்குவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவினால் அண்மையில் நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டு விவாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிராமங்களை முன்னேற்ற வேண்டும் ஸ்ரீ சுமங்கல தேரர்

நியூஸ்பெஸ்ட் முன்னெடுத்திருந்த 'மக்கள் சக்தி, இல்லங்கள் தோறும்' திட்டத்திற்கு மல்வத்து மகாநாயக்க தேரர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின் மூலம் கிராமங்களின் நிலையை அறிய முடிந்ததாக சுட்டிக்காட்டிய மகாநாயக்க தேரர், வீண் வாதங்களில் ஈடுபடுவதை விடுத்து கிராமங்களை முன்னேற்றுவதே சிறந்தது எனவும் வலியுறுத்திக் கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக அமைச்சர் மஹிந்த அமரவீர பதவியேற்றதன் பின்னர் முதன் முறையாக கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார். இதன் பின்னர் மல்வத்து விகாரைக்கு சென்ற அமைச்சர், மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து ஆசிபெற்றார். இந்த சந்தர்ப்பத்திலேயே மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மக்கள் சக்தி திட்டத்துக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

## சட்ட விரோத கார் விற்பனையில் ஈடுபட்டோர் தப்பியோட்டம்

துபாயில் கார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய மூன்று இலங்கையர்கள், குறித்த கார் நிறுவனத்தில் இருந்த 11 கார்களை, உரிமையாளர்கள் இல்லாத நிலையில் விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த மூன்று இலங்கையர்களும் குறித்த பதினொரு இரண்டாம் தரக் கார்களையும் 2.8 மில்லியன் தினாருக்கு விற்பனை செய்த பின்னர் சொந்த நாட்டுக்கு தப்பிச்சென்றதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஸகஸ்தான் நாட்டு முதலீட்டாளரும் அவரின் பங்காளியும் இந்த கார் நிறுவனத்தை நடத்தி வந்துள்ளனர். வெளிநாட்டு பயணம் மேற்கொண்டிருந்த இருவரும் நாடுதிரும்பியதும் சீசீடிவி கமராவின் பதிவுகளை பார்த்தபோது குறித்த பணியாளர்கள் மூவரும் கார்களை சிலருக்கு விற்பனை செய்தமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 51கி கஞ்சா கைப்பற்றப்பட்டது – மன்னாரில்

மன்னார் மாவட்டம், முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை, கல்லாறு கடற்கரை பகுதியில் இருந்து 51 கிலோ 500 கிராம் எடை கொண்ட கேரளா கஞ்சாப் பொதிகளை, கடந்த வியாழக்கிழமை மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

மன்னார் காவல்துறையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி உதவி காவல் பரிசோதகர் எச்.எம்.டபில்யு.ஹெரத் தலைமையிலான குழுவினர், முசலிப் பகுதிக்கு விரைந்து சென்ற நிலையில், போதைப்பொருள் கடத்தல்காரர்கள், 14 பொதிகளில்



அடைக்கப்பட்ட கேரளா கஞ்சாப் பொதிகளைக் கல்லாறு கடற்கரைப் பகுதியில் தூக்கி எறிந்த நிலையில் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது சுமார் மீட்கப்பட்ட கஞ்சாப்பொதிகள் சுமார் 51 கிலோ 500 கிராம் எடை கொண்டது எனவும் சுமார் 51 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதி வாய்ந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடரும் சட்ட விரோத மண் அகழ்வு பாராமல் இருக்கும் காவல்துறை

கிளிநொச்சி மாவட்டத்தின் அநேக பிரதேசங்களில் மணல் கொள்ளையர்களால் தொடர்ச்சியாக மணல் கொள்ளை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நிலையில் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டங்களிலும் அரச அதிகாரிகளுக்கும் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிச்சயமாக மணல் கொள்ளையர்களை கைது செய்வோம் என காவல்துறையினர் வாக்குறுதி அளித்திருந்தனர்.

எனினும் தற்சமயம் 06 மாதங்களாக கிளி திருவையாற்றில் உள்ள வில்சன் வீதியின் நான்காம், ஐந்தாம், ஆறாம் ஒழுங்கைகளுக்குப் பின்னால் அமைந்துள்ள பொது மக்களது விவசாய நிலங்களே மணல் கொள்ளையர்களால் மண் கொள்ளைக்காக அபகரிக்கப்படுகின்றது.

காவல்துறை கொள்ளையர்களிடம் பணத்தைப்பெற்று பாராமுகமாக செயற்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர்ச் செய்திகள்

# பொருளாதார நெருக்கடி உள்ளது

### அமைச்சர் தெரிவிப்பு

எமது மக்களின் இழப்பீடுகளை பூர்த்தி செய்யுமளவுக்கு பொருளாதாரம் நெருக்கடியாக உள்ளது. இருப்பினும், நாம் அதனை செய்யவே முயற்சிக்கின்றோம், இவ்வாறு புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம், இந்து அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

மேலும், தாம் அமைக்கும் வீடுகளுக்கு இன்றைய நவீன யுகத்துக்கு ஏற்ற வகையில் எரிவாயு தொலைபேசி இணைய வசதிகளை கொடுப்பதில் தவறில்லை. ஏனெனில், இன்றைய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டு சிங்கப்பூரை போல மாற்ற வேண்டும் என்பதே ஜனாதிபதி மற்றும் பிரதமருடைய விருப்பமாகும் எனவும் அவர் தெரிவித்தார். திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் கடற்படை முகாம் இருந்த 177 ஏக்கர் காணியை இரண்டாவது கட்டமாக உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 30 ஆண்டுகால யுத்தத்தில் பலர் தமது உறவுகளையும் உடமைகளையும் இழந்தவர்களாக காணப்படுகின்றனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

## மலைமுரசு MALAIMURASU இலங்கைச் செய்திகள்

# கட்டணம் செலுத்தப்பட்டும் மின்சாரசபை அமைதி பேணுவதேன்??


மட்டக்களப்பு மாவட்ட களுவாங்கேணி – ஏத்துக்கால் மீனவர்களின் தொழிற்துறைக்கு ஆதாரமாகக் காணப்படும் வெளிச்சக் கம்பம் சோபையிழந்து காணப்படுகின்றது. ஏத்துக்கால் கடற்பரப்பில் சுமார் 1600 ஆழ்கடல் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த மீனவர்களின் நலன்கருதி கிழக்கின் உதயம் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு வெளிச்சவீடு கடந்த 2009 ஆம் ஆண்டு அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தது.

மீனவர்களாகிய தாம் மீன்பிடிப்பதற்குக் கடலுக்குச் செல்லும் போதும் மீண்டும் கரை திரும்பும் போதும் இந்த வெளிச்சத்தினை அடையாளமாகக் கொண்டு தொழிலை முன்னெடுத்து வந்ததாகவும் ஆனால் கடந்த 15 மாத காலமாக குறித்த வெளிச்சக்கம்பம் ஒளிராமையால் தாம் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகுவதாகவும் மீனவர்கள் விசனம் தெரிவித்தனர்.

தாம் மின்சார சபைக்கு உரிய முறையில் மின் கட்டணங்களை செலுத்தி வருவதாகவும் உரிய தரப்பினருக்கு இது தொடர்பில் அறிவித்துள்ள போதிலும் எந்த விதப் பயனும் கிடைக்கவில்லை எனவும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

# "ஒரே நாட்டுக்குள் சமஷ்டி அடிப்படை தீர்வு"

### சீ.வி.விக்னேஸ்வரன்



சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே தமிழ் மக்கள் எதிர்பார்த்திருப்பதாக வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வினை வழங்குமாறு நீண்டகாலமாக கோருகின்றனர். இதனை வழங்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறி இருப்பாராக இருந்தால் அது வரவேற்கப்படுகிறது.


இந்த அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட அரசியல் தீர்வுக்கு சமஷ்டி முறைமையே அடிப்படையாக அமைகிறது. ஆனால் இது குறித்து சிங்கள அரசியல் வாதிகள, சிங்கள மக்கள் மத்தியில் பிழையான எண்ணத்தை ஊட்டி வைத்துள்ளனர் எனவும் ஒரே நாட்டுக்குள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வையே தாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஆதிவாசிகளுடன் மோதிய காவல்துறை அதிகாரிகள் – விசாரணை தொடர்கிறது

ஆதிவாசிகளின் தலைவரின் வீட்டில் நடந்த நிகழ்வொன்றுக்கு வந்திருந்த ஆதிவாசிக் குழுவொன்றுக்கும் காவல்துறையினருக்கும் இடையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மோதலில் ரத்துகல ஆதிவாசித் தலைவர் சுத வன்னிலாஎத்தோ, அவரது மனைவி, பிள்ளை மற்றும் காவல்துறை கான்ஸ்டபிள் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

ஒரு வீட்டில் சூதாட்டம் நடப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கிராமத்திலிருந்த வீட்டைத் தாம் சோதிக்கச் சென்ற போது ஆதிவாசிக் குழுவொன்று, தம்மைத் துரத்தித் தாக்கியதாகக் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

எனினும், தனது வீட்டில் பிள்ளையொன்றின் பிறந்தநாள் நிகழ்வுக்கு 40 பேர் வரை வந்திருந்த வேளை, ரத்மல்கல காவல் சாவடியைச் சேர்ந்த 04 அதிகாரிகள் மின்சாரத்தைத் துண்டித்துவிட்டு வந்திருந்தவர்களைத் தாக்கியதாக ரத்துகல ஆதிவாசித் தலைவர் தெரிவித்துள்ளார். அத்துடன், அவரது மனைவியான டி.எம்.பி. விமலவதி, மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு வீடு இருளாக இருந்த வேளையில் காவல் அதிகாரிகள் தன்னைக் காட்டுக்குள் இழுத்துச் செல்ல முயன்றதாகக் கூறியுள்ளார்.



# மன்னார் மனிதபுதைகுழியின் ஆதாரங்களை அழிக்குமாறு கொழும்பிலிருந்து உத்தரவு!!???




மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி குறித்த ஆதாரங்களை அழிக்குமாறு மன்னார் காவற்துறையினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. அரசாங்க தகவல்கள் இதனைத் தெரிவிக்கின்றன.

மன்னார் - திருக்கேதீஸ்வரம் பகுதியில் குறித்த மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அங்குள்ள கிணறொன்றில் காணாமல் போனவர்கள் பலரின் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. விசாரணைகளைத் தொடர்ந்து குறித்த கிணற்றைத் தோண்டி ஆராயும் பணிகள் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் உள்ள மனித புதைகுழிக்கான ஆதாரங்களை அழிக்குமாறு கொழும்பில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் அடிப்படையில் மன்னார் காவற்துறையினர் இரகசிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அதிகரிக்கும் டெங்கு நோய்



இலங்கையின் சகல பாகங்களிலும் டெங்கு நோய் மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார். இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் நாடு முழுவதிலும் 12,360 டெங்கு நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று மாதங்களிலும் இந்நோய்க்கு 12 பேர் பலியாகியுள்ளனர். இதேவேளை கடந்த 2014இல் 47 ஆயிரம் நோயாளிகள் இனம் காணப்பட்டனர். அவர்களில் 96 பேர் மரணமடைந்தனர். கடந்த வருடத்தில் 29,770 நோயாளிகள் இனம் காணப்பட்டனர். அவர்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 56.

இந்நிலையில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த அரசு இதுவரை ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட்டுள்ளது. இவ்வருடத்தில் இந்த நோயை மேலும் கட்டுப்படுத்துவதற்காக மார்ச் 29 தொடக்கம் ஏப்ரல் 4 வரை டெங்கு குடம்பிகளை அழிப்பதற்கான தேசிய மட்டத்திலான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

# 20 ஏக்கர் எரிந்து சாம்பலாகியது

திம்புள்ள பத்தனை பிரிவுக்குட்பட்ட குடாகம கொமர்ஷல் பகுதியில் உள்ள 50 ஏக்கர் கொண்ட காடு நேற்று திடீரென தீப்பற்றியதால் சுமார் 20 ஏக்கர் மரங்கள் தீயினால் எரிந்து சாம்பலாகியுள்ளன.

தீயை கட்டுப்படுத்த முயற்சித்தபோதும் காற்றின் வேகம் காரணமாக தீ அதிகளவில் பரவியதால் தீயை கட்டுப்படுத்த முடியவில்லை என திம்புள்ள – பத்தனை காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## பல்மைராவை கைப்பற்றியது சிரிய அரசாங்கம்

சிரியா

கடந்த வருடம் மே மாதத்திலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் இன் கட்டுப்பாட்டில் இருந்த, முக்கியத்துவம் மிக்கதும் பழைமையான நகரமுமான பல்மைராவுக்குள் அரசாங்கப் படைகள் இருக்கும் காணொளிகளை சிரிய அரச தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது.

பல்மைரா நகரப் பகுதிகளில் சிரிய இராணுவ வாகனங்களும் படைவீரர்களும் நகர்வது அக்காணொளியில் தெரிவதுடன், பழமையான இடங்கள் அழிக்கப்பட்டுள்ளதும் தெரிகின்றது. இந்நிலையில், வான் தாக்குதல்களை ஒருங்கிணைத்த ரஷ்ய சிறப்புப் படைகளின் கொமாண்டோ ஒருவர் கொல்லப்பட்டதாக லடாக்கியாவிலுள்ள அடையாளங்காணப்படாத ரஷ்ய இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். மேற்படி படைவீரர் வீர மரணமடைந்ததாகவும், பயங்கரவாதிகளால் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களால் சூழப்பட்ட நிலையில், தன்னைத்தானே சுட்டுக் கொண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## முஸ்லிம் அகதிகளின் கால்களை கழுவிய "போப்"

ரோம்

கேஸ்டல்நுவோ டி போர்டோ என்ற இடத்தில் உள்ள, தஞ்சம் கோரிகளின் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் முகாம் ஒன்றில், கத்தோலிக்க திருச்சபையின் ஈஸ்டர் பண்டிகைக் கொண்டாட்டங்களின் தொடக்கத்தைக் குறிக்கும் பிரார்த்தனை நிகழ்வு ஒன்றின் போது, போப் பிரான்ஸிஸ் முஸ்லீம் மற்றும் பிற குடியேறிகளின் கால்களைக் கழுவினார்.

பாரிஸ் மற்றும் பிரஸ்ஸல்ஸ் நகரங்களில் நடந்த தாக்குதல்களை அடுத்து எழுந்திருக்கும் கொந்தளிப்பான உணர்வுகள் நிலவும் சூழலில் இடம்பெற்ற பிரார்த்தனை நிகழ்வின் போது அவர் ஆற்றிய உரையில், போப் பிரான்ஸிஸ், பிரஸ்ஸல்ஸ் தாக்குதல்களை ரத்த வெறி பிடித்தவர்கள் செய்யும், போருக்கான சமிக்ஞை என்று வர்ணித்தார். அத்துடன் எம்மிடம் பல கலாசாரங்களும், மதங்களும் இருக்கின்றன ஆனால் நாம் எல்லோரும் சகோதரர்கள், அமைதியாக வாழவே விரும்புகிறோம், என்றார் அவர்.




## மாயமான விமானத்தின் என்ஜின் மீட்பு

மலேசியா

239 பேருடன் மாயமான மலேசிய விமானத்தின் என்ஜின் தென் ஆப்பிரிக்கக் கடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனத் தலைநகர் பீஜிங்கிற்குப் புறப்பட்ட மலேசியன் எயார்லைன்சைச் சேர்ந்த போயிங் MH370 விமானம் கடந்த 2014ம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதி அதிகாலை தெற்கு சீன கடற்பகுதியில் மாயமானது.

மாயமான விமானத்தைக் கண்டுபிடிக்க மலேசியா, அமெரிக்கா, சீனா உள்ளிட்ட 12 நாடுகள் 39 விமானங்கள் மற்றும் 42 கப்பல்களை தேடும் பணியில் ஈடுபடுத்தின. ஆனால், எதுவும் கிடைக்காததால் அதில் பயணம் செய்த 239 பேரும் விபத்தில் உயிரிழந்திருக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

தற்போது தென் ஆப்பிரிக்காவின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் மொசல்பே நகரக் கடலில் ஒரு விமானத்தின் என்ஜின் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது. அது விபத்துக்குள்ளான மலேசிய விமானத்தின் என்ஜினாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.



## வெளியேறின் பொருளாதாரம் பின்னடையலாம்

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியா வெளியேறும் பட்சத்தில் தீவிரமான பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும் என பிரித்தானிய தொழிற்சங்க சம்மேளனம் எச்சரித்துள்ளது. அத்துடன் 100 பில்லியன் பவுண்ஸ் பெறுமதியான பொருளாதார இழப்பு ஏற்படுவதுடன் ஒன்பது இலட்சத்து 50 ஆயிரம் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போகும் என சம்மேளன அதிகாரிகள் குழு மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறிய பின்னர் தொழில்வாய்ப்புகள் மற்றும் பொருளாதாரம் தொடர்ந்தும் முன்னேற்றம் அடையும் என பிரித்தானியா வெளியேற வேண்டும் என்ற பிரசாரத்திற்கு தலைமை வகிக்கும் அதிகாரி மெத்தீயூ எலியட் குறிப்பிட்டுள்ளார்.

## திரவ எரிபொருளைக் கொண்ட ஏவுகணைகள் வடகொரியா வசம்

சிரியா

கடந்த வாரம் பெலஸ்ரிக் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதனை செய்திருந்த வடகொரியா, அணு குண்டை தாங்கிச் செல்லக்கூடிய திறனை கொண்ட ஏவுகணையை விரைவில் பரிசோதனை செய்ய திட்டமிட்டுள்ளது. திரவ எரிபொருளை பயன்படுத்தி நீண்டதூர ஏவுகணைப் பரிசோதனையை இதற்கு முன்னர் வடகொரியா பரிசோதனை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வடகொரியா திண்ம எரிபொருளை பயன்படுத்தக் கூடிய ஏவுகணையை தயாரித்துள்ளதை தென்கொரியா உறுதிப்படுத்தியுள்ளது. இந்த விடயத்தை தீவிரமான ஒன்றாக தமது நாட்டு இராணுவம் எடுத்துள்ளதாக தென்கொரிய பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

திண்ம எரிபொருளை பயன்படுத்த-க்கூடிய இன்ஜின் ஒன்றை தாம் வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளதாக வடகொரியா அறிவித்திருந்தது. ஐக்கிய நாடுகளின் தடைகளுக்கு மத்தியில் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை தயாரிப்பதில் வடகொரியா தொடர்ந்தும் முனைப்பு காட்டுவதை இச் சோதனை எடுத்துக் காட்டு-வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இஸ்ரேலுக்கு எதிராக செயற்படுகிறதா ஐ.நா!!

இஸ்ரேல்

இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள நிறுவனங்களுக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானமொன்று பாகிஸ்தானினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நகர்வு இஸ்ரேலுக்கும் அதன் நெருக்கிய நட்பு நாடான அமெரிக்காவிற்கும் எரிச்சலை ஏற்படுத்தலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்கு கரை, ஜெருசலேம் மற்றும் ஹோலன் ஹைய்ட்ஸ் ஆகிய பகுதிகளில் இஸ்ரேல் நிர்மாணித்துள்ள யூதக் குடியேற்றங்கள் சர்வதேச சட்டத்தை மீறும் ஒன்றென பாகிஸ்தான் தனது தீர்மான வரைவில் சுட்டிக்காட்டியுள்ளது. எனினும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை இஸ்ரேலுக்கு எதிராக செயற்படுவதாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேல் தூதுவர் டனி டனன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## தாக்குதலில் ஈடுபட்டதாக சந்தேகித்து அறுவர் கைது

பிரஸ்சல்ஸ்

கடந்த செவ்வாய்க்கிழமை பெல்ஜியம் தலைநகரான பிரஸ்சல்ஸில் உள்ள விமான நிலையம் மற்றும் ரயில் நிலையங்களில் ஐ.எஸ் தீவிரவாதிகள் அடுத்தடுத்து தாக்குதல்களை நடத்தினர். இந்த தாக்குதலில் 32 பேர் கொல்லப்பட்டதுடன், 200க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். மேலும், இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றனர்.

இந்நிலையில், இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தப்பி தலைமறைவாக இருப்பதாக பிரஸ்சல்ஸ் காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. இந்த தகவலை தொடர்ந்து நகரில் உள்ள ஒவ்வொரு வீடாக அதிரடி சோதனை செய்த போது தாக்குதலில் ஈடுப்பட்டதாக சந்தேகப்படும் 6 பேரை அதிரடியாக கைது செய்துள்ளனர்.

இதே சமயம், பிரான்ஸ் தலைநகரான பாரீஸிலும் தாக்குதலை நடத்த திட்டமிட்ட நபர் ஒருவரையும் அந்நாட்டு காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

ஸவன்டெம் விமான நிலையத்தில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளின் படங்கள் வெளியாகியுள்ளன. விமான நிலைய சிசிடிவி கெமராவில் பதிவாகியுள்ள படத்தில் 3 இளைஞர்கள் கை தள்ளுவண்டியை தள்ளிக்கொண்டு விமான நிலையத்திற்குள் நுழைவது பதிவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

## மக்கள் முரசு

➡ வித்தியா சாகரன்




வியட்நாம் காடுகளுக்குள்ளேயே அமெரிக்கா இராணுவம் விட்டோடிக் கொண்டிருந்தது. இப்படி அமெரிக்கா வல்லரசு இராணுவம் கதிகலங்க வேண்டி வந்ததற்குக் காரணம் என்ன? ஏன்? அமெரிக்கர்களை இந்த வியட்நாம் இப்படிப் படாத பாடு படுத்தியது?

போராடும் ஒரு இனத்தின் ஆன்ம பலத்துக்கு முன்னால் ஆயுத பலம் தோற்றுத் தான் போகும். இது வரலாறு சொல்லித்தந்த பாடம். வியட்நாம், அந்த ஆன்மபலத்தின் உச்சியில் நின்று, சூட்டாக நின்ற ஆதிக்க வல்லரசுகளிடம் இருந்து தமது மண்ணை மீட்டுக் கொண்டது. ஆன்ம பலம் எதிலும், எப்பொழுதும் வெல்லும்.

இங்கே ஒரு கேள்வியைக் கேட்கலாம் நீங்கள். மனோபலத்தின் விம்பமான தலைமையையும், வியத்தகு தியாகங்களையும், நெஞ்சுரம் கொண்ட போராளிகளையும் கொண்ட ஒரு தமிழர்களுக்கான ஒரு விடுதலை இயக்கம், ஏன்? தம் மண்ணில் தோற்றுப் போனார்கள்? நியாயமான கேள்விதான். அதற்கு விடை ஆழமானது என்பது உண்மை. ஆனால் ஒருபக்க விடையை மேலே சொல்லிவிட்டேன்.

அதாவது "போராடும் ஒரு இனம்" என்பதே அது. புலத்திலும் நிலத்திலும் தமிழினம் வேடிக்கை பார்த்ததே தவிர, சீரியலில் கண்ணீர் விட்டதே தவிர, IPL இல் sixer எண்ணியதே தவிர போராடவில்லை. போராட தயாராக வில்லை. துணியவும் இல்லை. அந்த போராட்டம் எங்கோ தொலைவில் நடந்ததாகவும், அது யாருக்காகவோ நிகழ்ந்ததாகவுமே அந்த இனம் நினைத்துக் கொண்டது. சுருங்கச் சொன்னால் பார்வையாளராய் இருந்ததே தவிர பங்காளிகள் ஆகவில்லை. அதனால் இன்று அனாதையாய் நிற்கிறது.

இன்று பாடசாலை மாணவிகள் காணாமல் போவதும், வன்புணர்வு செய்யப்படுவதும் பொழுது போக்காகிப் போய்விட்டது. சாதாரண செய்தியாகிவிட்டது இல்லையா? தமிழரின் நிலம் இன்னும் உறவுகளை எதிர்பார்த்து காத்து கிடக்கிறது. மாற்றம் வேண்டி தேர்தலுக்குப் பின் பட்டாசு வெடிகொளுத்தி கொண்டாடிய இனம் ஒன்று சிரிப்பிழந்து நிற்கிறது. அந்த இனம் தமது தலையில் தாமே மண்ணள்ளிப் போட்டுக் கொண்டதை உணர இன்னும் காலம் இருக்கிறது.

சரி, மீண்டும் வியட்நாமுக்குள் நுழையலாம். இந்த வியட்நாம் தேசம் மீது அமெரிக்க கூட்டு வல்லாதிக்க இராணுவம் செய்த படு கொலைகளின் தன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றால், 90 களிலும் அதற்குப் பின்னும் மட்டு அம்பாறை மாவட்டங்களில் நடந்த படுகொலைகளுடன் ஒப்பிட்டுக் கொள்ளலாம்.

இன்று தமிழர்கள் பலர் மட்டு அம்பாறைப் படுகொலைகளை மறந்தே போய் விட்டார்கள். சந்ததிகளுக்குக் கூட அவற்றை சொல்லித்தர வக்கற்றுப் போய்விட்டார்கள். காந்தி செத்திட்டாரா? என்ற நகைச்சுவை போல, அப்படி அங்கே நடந்ததா? என்று கேட்கிறார்கள். எல்லோருக்கும் முள்ளி வாய்க்கால் இன அழிப்பு தெரிந்திருக்கும். ஆனால் அதனை விட கொடுமையான படுகொலைகள் மட்டு அம்பாறை மண்ணில் நிகழ்ந்து இருந்தது. இன்றும் அங்கே கண்களை மூடி ஒரு சொட்டு கண்ணீர் மட்டும் விட்டு விட்டு எழுந்து போகின்ற உறவுகள் ஏராளம். அப்படி வியட்நாம் மண்ணிலும் இருந்தார்கள். இருக்கிறார்கள்.

இலங்கை இராணுவம் முன்னிற்க, சொந்த மண்ணின் கைக்கூலி-களுடன், சகோதர சமய உறவுகளின் காட்டேரிகளும் கூட்டுச் சேர்ந்து விளைந்திடும் வயல்கள் தாண்டி, பொழிந்திடும் மலைகள் தாண்டி, குளிர்ந்திடும் அருவி குளங்கள் தாண்டி, கிராமம் கிராமமாக வாழ்ந்த மக்களை கொத்துக் கொத்தாக துப்பாக்கிகளாலும், அரிவாள்-களாலும், கொதிக்கின்ற தார் பீப்பைகளுக்குள் போட்டும், எரிகின்ற டயர்கள் போட்டும் வாழ்ந்த இனத்தை மட்டுமா அழித்தார்கள்? வரலாறையும், பாரம்பரிய மண்ணை-யும் அல்லவா புடுங்கிக் கொண்டார்கள்.

காத்திருங்கள் ...

## நிகழ்வுகள்

### "சாம்பல்தீவு ஒரு பார்வை"

➡ கதிரவன்

திருகோணமலை ஓய்வு பெற்ற ஆசிரியர் எஸ்.மோகனசுந்தரம் எழுதிய **"சாம்பல்தீவு ஒரு பார்வை"** என்னும் நூல் வெளியீடு 26.03.2016 காலை 9.30 மணிக்கு சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் ,டம்பெற உள்ளது. ,நிகழ்வில் எதிர்கட்சி தலைவரும் தமிழ் தேசிய கூட்மைப்பு தலைவருமான இரா.சம்பந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெளியீட்டினை ஆரம்பித்து வைப்பார்.

திருகோணமலை சந்திரோதய-மலர் பவுண்டேசனைச் சேர்ந்த வி.ரி.நவரெத்தினம் அவர்களால் ,ந்நூல் வெளியிட்டு வைக்கப்படுகின்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பின-ர்களான க.துரைரெட்ணசிங்கம், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.சுதாகரன், வலயக்கல்வி பணிப்பாளர் ந.விஜேந்தரன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

### மறுபாதி குழுமம் நடாத்தும் எஸ்.பொ. சிறப்பிதழ் வெளியீட்டு விழா

➡ கொலின்

இன்று 26.03.2016 மாலை யாழ்ப்பாணத்தில், ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் இம் மகுடம் சிறப்பிதழ் வெளியிட்டு வைக்கப்பட உள்ளது. மறுபாதி குழுமம் நடாத்தவிருக்கும் இவ்விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர் விழா ஏற்பாட்டாளர்கள்.

மறுபாதி குழுமம் நடாத்தும்
மகுடம்
எஸ்.பொ. சிறப்பிதழ்
வெளியீட்டு விழா



காலம் : 26.03.2016 சனி
மாலை 04.05 மணி
இடம் : புதிய உயர்கல்லூரி மண்டபம்
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்

தலைமை
கவிஞர். கருணாகரன்

எஸ்.பொ. அறிமுகம்
திரு.ந. குகபரன்
(ஆசிரியர் - புலரி)

முதல்பிரதி பெறுபவர்
திரு.கோ.றுஷாங்கன்
(இயக்குனர் - சிகரம்)

வெளியீட்டுரை
சி. ரமேஷ்
(ஆசிரியர் - யாழ்.மகாஜனக் கல்லூரி)

ஆய்வுரை
கவிஞர். தானா விஷ்ணு

நன்றியுரை - ஏற்பும்
மகுடம் வி. மைக்கல் கொலின்
(ஆசிரியர் - மகுடம்)

"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

### புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டு விழா


➡ அன்வர்

தோப்பூர் சமுக அபிவிருத்தி பேரவையினால் பாத்திமா பெண்கள் பாடசையில் தோப்பூர் 17.03.2016ம் திகதி கல்வி கோட்டத்திற்கு உட்பட்ட சுமார் 17 தமிழ் முஸ்லிம் பாடசாலைகளில் 05ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் 70க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கௌரவித்து சான்றிதல்களும் பதக்கங்களும் அணிவித்து கௌரவிக்கபட்டனர்.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர், கௌரவ அதிதியாக மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் மன்சூர், சிறப்பு விருந்தினர்களாக தோப்பூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் மன்சூர் அலி மற்றும் ஈச்சலம்பற்று கோட்ட கல்வி அதிகாரி லோகராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் அனைத்து பாடசாலைகளின் அதிபர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூய செயல்கள் வெல்லும்... ...

மார்க்கப் பற்று மிகப் பெற்ற
மனிதனாக வாழப் பார்!
யார்க்கும் தீமை தான் செய்ய
யாண்டும் மனதில் எண்ணாதே!

போர்க்கு ணங்கள் தனை விட்டே
போஷிப்பாய் நீ நே(தே)சத்தை
தீர்க்கமாகச் சொல்லுகிறேன்
தீய செயல்கள் வெல்லாதே!

கண்ட பெண்கள் அனைவரையும்
கலந்து மகிழ எண்ணாதே!
பெண்கள் எல்லாம் உன் காமப்
போகப் பொருளாய்க் கொள்ளாதே!

மண்ணில் உன்னை ஈன்ற உயர்
மாதா அவளும் பெண்தானே!
திண்ண மாகச் சொல்லுகிறேன்
தீய செயல்கள் வெல்லாதே!

காட்டிக் கொடுக்கும் எண்ணமதைக்
கருத்திற் கொண்டு வாழாதே!
ஈட்டி போலும் மற்றவர் தம்
இதயம் தன்னில் பாயாதே!

போட்டி, பூசல், கெடுபிடிகள்
பொல்லாக் கொள்கை கொல்லுமுனை!
தீட்டி வைத்தார் அறிஞர் பலர்
தீய செயல்கள் வெல்லாதே!

இனிய வார்த்தைகள் இருக்கையிலே,
இழிவு வார்த்தை பகராதே!
கனியை விடுத்து நீ பச்சைக்
காயைப் புசித்தால் சுவையாதே!

முனிவு கொண்டு வாழ்வதனால்
மூர்க்கனென்று பெயர் பெறுவாய்!
துணிந்து சொல்வேன் நண்பா கேள்,
"தூய செயல்கள் தான் வெல்லும்!"

அ.கௌரிதாசன்,
ஒரு கவிதை எழுதிவிட நூலிலிருந்து...

## நின்றதே

- - தாமரைத்தீவான் - -
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

உலகை விட்டுப் போகலாம்?
உறவை விட்டுப் போகலாம்?
கலகம் செய்யும் புவியிதால்...?
கண்ணை மூடிப்போகலாம்?

அமுது போன்ற சுவை தரும் -
ஆருயிரைக் காத்திடும்.
தமிழை விட்டுப் போவதே...
தாங்க முடிவதில்லையே?

மிகவும் மூத்த தமிழ் மொழி
மேலை நாட்டை விட்டு, நம்
அகமுருக்கிக் 'குமரி'யின்
அழிவின் பின்னும் உள்ளதேல்....

எமை மறந்து போகையில்
இதை மறத்தல் எவ்விதம்?
அமைதி காட்டும் தமிழ் இது.
அமர்க்களத்தும் நின்றதே!

# கவிமுரசு

## தனிமை



தென்றலும் நின்று போனது
அவள் தனிமை கண்டு... நிலவும்
கரைந்து போனது அவள்
கண்ணீர் கண்டு...

வான் முகிலும் விலகி சென்றது...
அவள் மென்மை கண்டு...
பூக்களும் மௌனித்துக் கொண்டது
அவள் மௌனம் கண்டு...

அவள் மனதில் குவிந்து
நிறைந்த வார்த்தைகள்...
நாவரை வந்து போனது
அவளின் நிலைமை கண்டு...

பேச முடியா பிறவி
ஊமைகளுக்குள் - பேச முடிந்த
பிறவி ஊமையவள்....

## உன் நினைவுகள்



வெகுளியானப் பள்ளி நாட்களில்
எதார்த்தமாக உன் பார்வையால்
எனக்குள் பரந்தன
கற்பனைப் பட்டாம் பூச்சிகள்.

நமக்குள் தோன்றியது,
வார்த்தைகளே இல்லாமல்
புன்னகையால் வண்ணம் தீட்டிய
புதவகை நேச ஓவியம்.

உன் பெயரின் முதல் எழுத்தும்
என் பெயரின் முதல் எழுத்தும்
ஒன்றாக சேர்த்து எழுதிய
நமது பெயரைத் தாங்கிய
மரங்களெல்லாம் இன்று
தோல் உரிந்து நிற்கின்றன

ஆனால் நம் நேசம் மட்டும்
புன்னகையென எஞ்சி நிற்கின்றது,
என் இதயமெனும் கோவிலிலே.
நாளை புலரும் என்று
நாட்கள் நகர்ந்ததேயன்றி
ஏமாற்றமும்
எதிர்பார்ப்புக்களுமே
எஞ்சியவையாயிற்று
இவர்கள் வாழ்வில் - இருந்து
விடியலுக்காய்
விழித்திருக்கின்றார்கள்
தினம் ஏக்கங்களைச்
சுமந்த இதயங்களோடு....

ஸ்ரீ கயல்

# இன்று வெளியீடு காணும் எஸ்.பொ சிறப்பிதழ் தொடர்பான சிறப்புப் பார்வை

மட்டக்களப்பில் இருந்து கடந்த நான்கு வருடகாலமாக வெளி வந்து கொண்டிருக்கும் மகுடம் கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழின் பத்தாவது இதழ் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் தவிர்க்க முடியாத ஆளுமையாக கணிக்கப்படுபவரும், முற்போக்கு இலக்கியத்திற்கு எதிராக நற்போக்கு இலக்கியம் என்ற மாற்றுச் சிந்தனைப் போக்கினை அறிமுகப்படுத்தியவருமான எஸ்.பொ சிறப்பிதழாக மலர்ந்துள்ளது.

ஈழத்திலும் தமிழர் நாட்டிலும் பரவலாக அறியப்பட்ட பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, எஸ்.பொ, பிரமிள், மு.தளையசிங்கம் போன்றோர்களில் எஸ்.பொ முதன்மையானவர், முக்கியமானவர். மனிதர்களின் பாலியல் தொடர்பான உணர்வுகளை தனது படைப்புகளில் நேரிடையாக கையாண்டதன் மூலம் தன்னை ஒரு வித்தியாசமான, பிரச்சினைக்குரிய எழுத்தாளராக கணிக்கச் செய்தவர். எஸ்.பொ பல முரண் நிலைகளுடன் போட்டியிட்டு கடைசி வரை தனது கொள்கை வழி நின்று இலக்கியம் படைத்தவர். நற்போக்கு இலக்கியத்தின் பிதாமகராக கருதப்படும் அவருக்கு சிறப்பிதழ் வெளியிட்டதன் மூலம் மகுடம், தமிழ் இலக்கிய உலகிற்கு மற்றுமொரு மாபெரும் பங்களிப்பினை செய்துள்ளது.

ஈழத்தில் முதன் முதலாக நவீன தமிழ் இலக்கியத்தின் பிதாமகராக கருதப்படும் பிரமிள் என்கிற தர்மு சிவராமுவுக்கு சிறப்பிதழ் வெளியிட்டதன் மூலம் பிரமிள் தொடர்பாக போதுமான அறிதலும் புரிதலும் அற்றிருந்த ஈழத்து இலக்கிய உலகிற்கு அவரைப் பற்றிய ஒரு தெளிவான பார்வையை வழங்கியது மகுடமே. பல்கலைக்கழக ரீதியாக பிரமிள் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுக்க தூண்டுதலாய் அமைந்ததன் காரணமாக தமிழ் நாட்டிலும் மீள் பிரசுரம் பெற்றது மகுடம்.

மகுடம் இதுவரை இரண்டு முறை மலையக சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது. அதில் மலையகத்தின் இரு பெரும் கவிஞர்களான கவிஞர் கபாலி செல்லன், பரமஹம்ச தாசன் பற்றி எழுதிய பின்னரே அவர்களை மலையக இலக்கியவாதிகள் அடையாளம் கண்டு கொண்டனர்.

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முதன் முதல் அவருக்கு சிறப்பிதழ் வெளியிட்டதும் மகுடமே. நான்கு தலைமுறைகளைச் சேர்ந்த ஈழத்து சிறுகதை படைப்பாளிகள் பதினைந்து பேரின் சிறுகதைகளை மகுடம் சிறுகதை சிறப்பிதழ்களை வெளியிட்டதன் மூலம் பல சிறுகதை படைப்பாளிகளை மீள எழுதத்தூண்டிய பெருமையும் மகுடத்திற்கு உண்டு.

அந்த வகையில் பல் பரிமாண ஆளுமை கொண்ட எஸ்.பொ தொடர்பான, அவரது சிறப்பியல்புகளைக் கூறும் கட்டுரைகள் ஆய்வு ரீதியாக இவ் இதழில் வரையப்பட்டுள்ளது.

எஸ்.பொவின் முழு மொத்த ஆளுமையையும் ஆய்வு செய்யும் பேராசிரியர் செ.யோகராசாவின் கட்டுரையும், அவரது நாவல்களை தனித்து ஆய்விற்குட்படுத்தும் கவிஞர் செங்கதிரோனின், எஸ்.பொவின் சிறுகதைகளையும் அதில் இழையோடும் பாலியல் தொடர்பான உணர்வுகளையும் பற்றிய அ.ச. பாயாவாவின் கட்டுரையும், எஸ்பொவுக்கும் முஸ்லிம் மக்களுக்குமான தொடர்பினையும், நல்லுறவினையும் கூறும் பீர் முகமதுவின் கட்டுரை, வரலாற்றில் வாழ்தல் என்ற நூலின் மூலம் தனிமனித சரித்திரத்தை இலக்கியமாக்கிய எஸ்.பொ பற்றி கூறும் திருமதி ரூபி வலண்டீனா பிரான்சிஸ்சின் கட்டுரையோடு குந்தவை, குப்பிளான் சண்முகன், சாந்தன், எஸ்.எல்.எம் ஹனிபா, பாலசுப்பிரமணியம், ஈழவாணி என ஈழத்தின் முக்கிய படைப்பாளிகளின் எஸ்.பொவுடனான நினைவிடை தோய்ந்த வரலாற்றுச் சம்பவங்கள் கட்டுரையாக்கப்பட்டுள்ளது.

எஸ்.பொவின் முத்திரைச் சிறுகதையான தேர் என்ற சிறுகதையும், நற்போக்கு ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் என்ற அவரது நூலிற்கு அவர் எழுதிய முன்னுரையும், தமிழ் நாட்டில் இருந்த போது அங்கு அவர் வழங்கிய நேர்காணலின் சில பதிவுகளும் இதழை அணி சேர்க்கின்றன.


கவிஞர்கள் நிலாதமிழின் தாசன், எஸ்.பாலமுருகன் லலித கோபன், களப்பூரான் தங்கா (கனடா), ஆகியோரின் கவிதைகளுடன் லண்டனில் வசிக்கும் கரவை மு.தயாளனின் அம்மாவும் பிள்ளைகளும் என்ற சிறுகதை லண்டனை கதைக் களமாகக் கொண்டாலும் ஈழத்து தமிழர்களே கதை மாந்தர்களாக உள்ளனர். எப்படி ஈழத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எமது மாணவர்களை பிழிந்து எடுக்கிறதோ அதேபோல் லண்டனிலும் ஆறாம் வகுப்பில் ஐயாயிரம் பேரில் இருந்து அறுநூறுபேரை தேர்ந்தெடுக்கும் போட்டி பரீட்சை எவ்வாறு தமிழ் சமூகத்தினையும் பாதிக்கிறது என்பதை மிக அழகாக சொல்லும் சிறுகதை.




இவ்விதழில் எஸ்.பொவின் சகோதரரை நேர்காணல் செய்ததன் மூலம் ராகவன் பல விடயங்களை வெளிக்கொண்டு வருகிறார். இறுதியாக பேராசிரியர் துரை மனோகரன் அவர்கள் பேராசிரியர் க.அருணாசலம் தொடர்பாக எழுதியிருக்கும் நினைவுப்பிரதி, கடைசிப்பக்கத்தில் எஸ்.பொ மொழி பெயர்த்த ஆபிரிக்க நாவல்களின் அட்டைப் படம், அவரது நூல் தொடர்பான விபரம் என பல விடயங்கள் உள்ளன.

மூன்று சிறுகதை, நான்கு கட்டுரை ஐந்தாறு கவிதைகள் என்ற வாய்ப்பாட்டுத் தனமான ஈழத்து சஞ்சிகை வரலாறில் இருந்து ஒவ்வொரு இதழையும் வித்தியாசமான முறையில் ஆய்வு ரீதியாகவும், விமர்சன பூர்வமாகவும் முரண் நிலை இலக்கியத்தை முக்கியத்துவப்படுத்தி வெளிவரும் மகுடம் ஈழத்து இதழ்களில் மகுடமாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நல்லாட்சி மீதான விமர்சனங்களுக்கான நேரம்

**கனகலிங்கம் கோபிகிருஷ்ணா**
www.tamilmirror.lk

**ந**ல்லாட்சி என்ற கோஷத்தை முன்வைத்து, அப்போதைய சுகாதார அமைச்சரான மைத்திரிபால சிறிசேன, தனது கட்சியின் தலைவரும் அப்போதைய ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவுக்கெதிராக, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தபோது, மைத்திரிபால சிறிசேன வெற்றி பெறுவார் என்ற எதிர்பார்ப்புக் காணப்பட்டிருக்கவில்லை.

மாறாக, மற்றொரு தேர்தலில் தோல்வியடைவதிலிருந்து, ரணில் விக்கிரமசிங்க தன்னைக் காத்துக் கொண்டார் என்றே கருதப்பட்டது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது மக்களுக்குக் காணப்பட்ட விமர்சனம், மைத்திரிபால சிறிசேனவுக்கான வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவு, புதிதாக வாக்களிக்கத் தொடங்கிய இளைஞர்களைக் கவர்ந்தமை ஆகியவற்றினால், மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து, மைத்திரிபால சிறிசேனவினால் ஜனாதிபதியாக முடிந்தது. அதைத் தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கமும் அமைந்தது. அதன் பின்னர் இடம்பெற்ற தேர்தலிலும் கூட, மைத்திரிபால சிறிசேனவின் மறைமுக ஆதரவைப் பெற்றிருந்த ஐக்கிய தேசிய முன்னணி, வெற்றிபெற்றிருந்தது. ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றமை தொடக்கம், இந்த அரசாங்கத்தின் நல்லாட்சி என்ற கொள்கைப் பிரசாரம், மக்களிடம் அதிக வரவேற்பைப் பெற்றது. இந்த அரசாங்கத்தைக் கூட, நல்லாட்சி அரசாங்கம் என்றே அனைவரும் அழைத்து வந்தனர்.

ஆரம்பத்தில், மக்கள் நேசத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய இவ்வரசாங்கம், பொருட்களின் விலைகளைக் குறைத்தும் ஊழல் செய்ததாகக் கருதப்பட்ட முன்னைய ஆட்சியாளர்களில் சிலரைக் கைது செய்யும், மக்களின் வரவேற்பையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொண்டது. அவ்வரசாங்கம் மீதான விமர்சனங்கள் முன்வைக்கப்படும் போதெல்லாம், **"புதிய அரசாங்கம், அவர்களுக்கு நேரம் வழங்க வேண்டும்"**, "முன்னைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தவறுகளைத் திருத்தவே நேரம் போதாது" என்று தெரிவிக்கப்பட்டு, விமர்சனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. அவற்றில் நியாயம் இருக்கவும் தான் செய்தது. புதிதாகப் பதவியேற்று சில மாதங்களிலேயே, உடனடி முடிவுகளை எதிர்பார்க்குமளவுக்கு, அரசாங்கத்திலுள்ளவர்கள் ஒன்றும் மந்திரவாதிகள் அல்லர்.

மாற்றங்களை ஏற்படுத்துவதொன்றும் அவ்வளவு இலகுவானதன்று. அத்தோடு, முன்னைய அரசாங்கத்தின் ஆதரவாளர்கள், இன்னமும் பலமாகக் காணப்பட்டிருந்த நிலையில், அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களைப் பயன்படுத்தி, சில மாதங்களிலேயே அரசாங்கத்துக்கெதிரான அலையொன்றை ஏற்படுத்தும் வாய்ப்பும் இருந்தது. அரசாங்கத்தின் மீதான உச்சக்கட்ட விமர்சனங்களை நிறுத்தி வைத்திருந்தாலும் அல்லது குறைவாக வெளிப்படுத்தியிருந்தாலும், எந்தளவுக்குப் பொறுத்திருப்பது அல்லது எவ்வளவு காலத்துக்குப் பொறுத்திருப்பதென்பது, முக்கியமான முடிவாகும். அரசாங்கம் பதவியேற்று, இவ்வாண்டு ஜனவரி 9ஆம் திகதியுடன் ஓராண்டு பூர்த்தியடைந்திருந்தது. அதன் பின்னர், ஓரளவு விமர்சனங்கள் முன்வைக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து, நாட்டில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிதி நெருக்கடியைத் தொடர்ந்து, வரி விதிப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

அதன் விளைவாக, பல்வேறு வரிகள் அதிகரிக்கப்பட்டாலும், கோதுமை மாவின் வரி அதிகரிக்கப்பட்டமை, உடனடியாகவே மக்களைத் தாக்கியிருந்தது. கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாணின் விலையும் அதிகரித்தது. வற் வரி அதிகரிப்பு, மூலதன ஈட்டு வரி மீள் அறிமுகம் போன்றன, சாதாரண மக்களால் புரிந்து கொள்ளப்படமுடியாத ஒன்று. ஆனால், நாளாந்த உணவின் வரி அதிகரிப்பென்பது, அம்மக்களை நேரடியாகத் தாக்கும் ஒன்றாகும். இந்த வரி அதிகரிப்புத் தொடர்பாக அறிவிக்கப்பட்ட நாடாளுமன்ற அமர்வில் கருத்துத் தெரிவித்த பிரதமர் ரணில், முன்னைய அரசாங்கம் மீதும் முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதும் விமர்சனங்களை முன்வைத்து, அவர்களாலேயே இந்நிலை ஏற்பட்டது எனக் குறிப்பிட்டார். இது, மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான முன்னாள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஞாபகப்படுத்தியது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, நாட்டில் இடம்பெற்ற அத்தனை தவறான விடயங்களையும் விடுதலைப் புலிகளின் மீது குற்றஞ்சுமத்தும் பழக்கம் காணப்பட்டது. போர் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர், புலிகளின் மீளெழுச்சி மீதும் வெளிநாட்டிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மீதும் வெளிநாட்டுச் சூழ்ச்சிகளின் மீதும் சுமத்திக் கொண்டிருந்தது.

அந்த அரசாங்கம் தோல்வியடைந்த பின்னர், வெளிநாட்டுச் சக்திகளின் மீதும் மேற்கத்தேய சூழ்ச்சி மீதுமே, அத்தரப்பு, குற்றங்களைச் சுமத்திக் கொண்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட காரணங்கள் மூலம், அவ்வரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகளினால் பிரச்சினைகள் ஏற்படுத்தப்படவில்லை என்றோ அல்லது வெளிநாட்டிலுள்ள விடுதலைப் புலி ஆதரவாளர்கள், அவ்வரசாங்கத்துக்குச் சவாலாக இருக்கவில்லை என்றோ அல்லது ஜனவரி 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் மேற்கத்தேய சக்திகளின் பங்களிப்புச் சிறிதளவு கூட இருக்கவில்லை என்பதோ அர்த்தம் கிடையாது.

ஆனால், அனைத்துப் பிரச்சினைகளையும் மேற்குறிப்பிடப்பட்ட காரணிகள் மீது சுமத்த முடியாது. அதேபோல் தான், முன்னைய அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவம் மீதான விமர்சனமென்பது தவறென்பதாக ஆகிவிடாது. ஆனால், நாட்டின் தற்போதைய நிதி நிலைமைக்கு, அது மட்டுந்தான் காரணம் என்றவாறு, குற்றத்தை ஒரு தரப்பிடம் மாத்திரம் தள்ளிவிடும் நிலைமையும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. ஏனெனில், கடந்தாண்டு மிகவும் அதிகம் பேசப்பட்ட மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரமென்பது, முன்னைய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று கிடையாது. மாறாக, ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருங்கியவரான மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனாலும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவாலும் ஏற்படுத்தப்பட்ட சிக்கலே அது.

நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத்திட்டம், நாடாளுமன்றத்தில் வைத்து சில வாரங்களிலும் பின்னர் தற்போதும் மாற்றியமைக்கப்பட வேண்டி ஏற்பட்டமைக்கும், மஹிந்த ராஜபக்ஷவைக் காரணமாகச் சொல்லிவிட்டுத் தப்பிக்க முடியாது.

மாறாக, தற்போதைய அரசாங்கத்தின் தவறுகளும் காரணமாக அமைந்தன என்பதே உண்மை. இந்நிலையில் தான், புதிய அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களென்பவை அவசியமாகின்றன. விமர்சனங்களென்றால், அரசாங்கத்தை முழுவதுமாக எதிர்ப்பது என்ற அர்த்தப்படாது, அரசாங்கத்தின் தவறுகளைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட வேண்டியதே அவசியமாகிறது. ஏனென்றால், "முன்னைய அரசாங்கத்தை விட இது எவ்வளவு சிறந்தது", "முன்னைய அரசாங்கக் காலத்தில் விமர்சனங்களை முன்வைக்காது இருந்தீர்கள், இப்போது மாத்திரம் எதற்காக உடனடியாகக் கூச்சலிடுகிறீர்கள்" என, விமர்சனங்கள் மீது முன்வைக்கப்படும் பதில்கள், தவறானவை. முன்னைய அரசாங்கத்தை விட ஓரளவு சிறப்பாக இருப்பதற்காக இவ்வரசாங்கம் தெரிவுசெய்யப்பட-வில்லை. முன்னைய ஜனாதிபதியை விட ஓரளவு சிறந்த ஜனாதிபதியாக இருப்பதற்காக, இந்த ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

மாறாக, **முன்னர் காணப்பட்ட அரசியல் கலாசாரத்தை முழுவதுமாக மாற்றி, அரசியல் புரட்சியொன்றை மேற்கொள்ளவே, இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன. ஆகவே, முன்னைய அரசாங்கத்துடனும் ஜனாதிபதியுடனும் ஒப்பிடும் போது, என்ன காரணத்துக்காக மக்கள் இவர்களைத் தெரிந்தார்கள் என்பதன் அர்த்தமே இல்லாமற் போகிறது.**

எனவே தான், அண்மையில் இடம்பெற்ற றோயல் கல்லூரிக்கும் சென். தோமஸ் கல்லூரிக்குமிடையிலான வருடாந்த கிரிக்கெட் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வின் மேடைக்கு, அழையா விருந்தாளியாக ஜனாதிபதியின் மகன் தஹாம் சிறிசேன சென்றமையும், தஹாம் சிறிசேனவுக்கும் அவரது நண்பர்களுக்குமாக இங்கிலாந்து விசா கோரப்பட்டதில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுத் தலையிட்டது என்ற செய்தியும், அரச நிகழ்வுகளில் ஜனாதிபதியின் மகளான சத்துரிக்கா சிறிசேனவின் வருகை போன்றனவும், கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசமின் எச்.ஐ.வி தொடர்பான கருத்துகளும், அதிகரிக்கப்படும் வரிகளும், போதுமான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அப்போது தான், இந்த அரசாங்கமும் ஜனாதிபதியும், என்ன காரணத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டார்களோ, அந்தக் காரணத்தை அடைய முடியும் என்பது உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(வி.என்.சந்திரகாந்தி)

வாழ்வியல் 97


# கொலையும் தற்கொலையும்

இலட்சக்கணக்கான உயிரினங்கள் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவை தமது இருப்பைதக்க வைப்பதற்காக தொடர்ந்து வாழ்வுக்கான போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளன. இந்த போட்டி உலகில் தம்மை தக்க வைக்க தவறும் உயிரினங்கள் ஒன்றில் அழிந்து விடுகின்றன... அன்றேல் அருகி காணப்படுகின்றன. அதனால் தான் எமது அரசாங்கம் கூட யானை, மான், மயில் உட்பட பல காட்டு மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடுவதையும் கொல்வதையும் தடை செய்துள்ளது. அதே சமயம் மிருகங்கள் எவையும் தமது உணவுக்காக அன்றி பிற மிருகங்களை வேட்டையாடுவதில்லை.

உயிரினங்களிலேயே மிகவும் மேம்பாடு படைத்தது மனித இனம்தான். எமது உடல் அமைப்பு, பல் முதற்கொண்டு குடல் வரை எம்மை ஒரு தாவர பட்சணியாகவே அடையாளம் காட்டுகின்றது. மிருகங்களினுடைய குடல் பச்சை மாமிசத்தையும் இரத்தத்தையும் சமிபாடடைய செய்யும் வகையில் அமைந்துள்ளது. எமது பற்களால் பச்சை மாமிசத்தை கிழிக்க முடியாது. குடல் போன்ற சமிபாட்டு உறுப்புக்கள் அவற்றை ஏற்கவும் மாட்டா. ஆனால் நாம் என்ன செய்கின்றோம்? செயற்கையாக இறைச்சியை பதப்படுத்தி உண்ணுகின்றோம். எம்மை நம்பி வாழும் பிராணிகளை கொன்று உண்பது எப்பேர்ப்பட்ட பரிதாபம் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். இன்னும் சத்வ குணம் படைத்த எம்மில் ஓர் பிரிவினர் மாமிசத்தை மறுத்து உயிர்வாழ்கின்றனர். பதிலாக ரஜோ, தமஸ் ஆகிய குணங்களை உடையவர்கள் தமது உயிரை பேணுவதற்கும் உடலை வளர்ப்பதற்கும் மாமிச பட்சணிகளாக மாறி இரைகளை கொன்று உண்கின்றார்கள்.

இவை யாவற்றிற்கும் அப்பால் இந்தப் பூவுலகில் வாழும் பொருட்டு இறைவன் அல்லது ஏதோ ஒரு சக்தி மனிதனுக்கு வழங்கிய உயிரை அவன் இன்று மிலேச்சத்தனமாக இரண்டு வழிகளில் அழித்து வருவது மிகவும் மனம் வருந்தத்தக்கதாகும். அவற்றில் ஒன்று கொலை, மற்றையது தற்கொலை!

முன்னாட்களில் அபூர்வமாக நடந்த கொலைகள் இப்போ பல்கி பெருகியுள்ளன. எம்முன்னாலேயே கொலைச்சம்பவங்கள் நடந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படியில்லாவிட்டாலும் இன்று சி.சி.ரி.வி கமராவில் பல கொலைச்சம்பவங்கள் ஆதார பூர்வமாக பதியப்பட்டு இணையத்தில் உலா வருகின்றன.



நடைபெறும் ஒவ்வொரு கொலைகளுக்குமே ஏதோ ஒரு அடிப்படை காரணம் இருக்கவே செய்கின்றன. திட்டமிடாமலும் கைபிழைபாடாகவும் கூட கொலைகள் நடந்து விடுகின்றன. நோக்கமில்லாமலும் பிறரை பயமுறுத்தவுமென எடுக்கும் ஒரு நடவடிக்கை கொலையில் முடிந்து விடுகின்றது. இதனைத்தான் "கமோசக்கொலை" என்று சட்டம் கூறுகின்றது.

அனேகமான கொலைகள் குடும்ப சச்சரவுகள் காரணமாக நடந்தேறி-விடுகின்றன. பரம்பரை பரம்பரையாக நல்ல உறவை பேணிவரும் சொந்தங்களிடையே உண்டாகும் உட்பூசல்கள் மற்றும் புதிய தலைமுறையினர் மூத்தோரை மதிக்காத தன்மைகள் குடும்பங்களிடையே விரிசலை உண்டு பண்ணி விடுகின்றது. அந்த விரிசலே ஈற்றில் கொலைக்கு காரணமாக அமைந்து விடுகின்றது!

வாய்த்தர்க்கம் முற்றுவதால் பல கொலைகள் நடந்தேறிவிடுகின்றன. "யாகாவாராயினும் நாகாக்க காவாகால் சோகாப்பர் சொல்லிழுக்குபட்டு" என்பது திருக்குறள். அண்மையில் "யாகாவாராயினும் நாகாக்க" என்று ஒரு திரைப்படம் வெளிவந்தது. நான்கு நண்பர்கள் தங்கள் கற்கை இறுதியில் ஆறுமாத காலத்தை சுதந்திரமாக கழிக்க திட்டமிடுகிறார்கள். அவர்களில் ஒருவன் தனது வாயால் வம்மை விலைக்கு வாங்குகின்றான். மற்ற நண்பர்கள் முயன்றும் தடுத்தும் அவன் கேட்கவில்லை. அதனால் அவர்கள் மீது ஒரு கொலைக்குற்றம் விழுகின்றது. அதிலிருந்து அவர்கள் மீள்வதற்கு எடுக்கும் முயற்சிகள் பல வன்செயல்களுக்கும் அடிபிடி சண்டைகளுக்கும் காரணமாகின்றது.

அடுத்து, குடியும் போதையும் பல கொலைகளுக்கு காரணமாக உள்ளன. போதை, மனிதனின் சீரிய சிந்தனைக்கு தடையாக அமைந்துவிடுகின்றது. எது சரி, எது தவறு என்பதை புரிந்து கொள்ள முடியாத நிலை உருவாகின்றது. அத்துடன் மற்றவர்களது புத்திமதியை ஏற்கவும் மனம் இடங்கொடுப்பதில்லை

இனி, குடிபோதை ஒரு மனிதனின் தலைக்கேறியதும் அவனது பலவீனங்கள் செயல் உருப்பெறுகின்றன. நடந்தேறிய வித்யா வல்லுறவும் கொலையும் மற்றும் சிறுமி சேயா வல்லுறவும் கொலையும் போன்றவை வெறி தலைக்கேறிய நிலையில் நடத்தப்பட்டவையே. வித்யா வழக்கு விசாரணைகள், குற்றவாளிகள் மூன்று நாட்கள் கேரளா கஞ்சா பாவித்த நிலையில் இருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றன.

தாம்பத்திய துரோகங்கள் பல கொலைகளுக்கு காரணமாக இருந்துள்ளன. கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் துரோகம் செய்வதால் ஒருவர் மீது மற்றவருக்கு தீராத பகை உண்டாகின்றது. அதன் நிமித்தமாக பழிவாங்கும் உணர்வுகள். மேலோங்குவதுடன் தத்தம் இஷ்டங்களை நிறைவேற்றிக்கொள்ளும் திட்டங்களும் உருவாகின்றன. தத்தமக்கு சாதகமானவர்களது உதவியுடனோ ஒப்பந்த அடிப்படையில் பணத்தை கொடுத்தோ கொலைகள் மேற்கொள்ளப் படுகின்றன. எமது நாட்டின் தென்பகுதியில் உள்ள கிராம புறங்களில் படிப்பறிவற்ற குடும்பங்களில் இப்படியான சம்பவங்கள் அதிகளவில் நடந்தேறியுள்ளமையை பத்திரிகைகள் வாயிலாக அறியலாம்.

சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் எம்மக்களின் மனதில் நன்கு வேரூன்றி உள்ளன. அதனால் தமது பிள்ளைகள் தமது அந்தஸ்துக்கு குறைந்த இடத்தில் காதல் செய்தால் அல்லது விவாகம் முடித்தால் எதிர் தரப்பினரை பழிவாங்கும் உணர்வு விஸ்வரூபம் எடுக்கின்றது. இந்தியாவில் இதனை முன்னிட்ட கொலைகள் நடந்தேறிக்கொண்டி-ருக்கின்றன. அண்மையில் ஒரு தந்தை, தனது மகளை விவாகம் செய்த தலித் இளைஞனை நான்கு உறவு பையன்களை வைத்து பட்ட பகலில் ஜன திரளின் மத்தியில் வாளால் வெட்டி கொலை செய்த சம்பவம் தமிழகத்தில் இடம்பெற்றது.

இன்னும்.. பணகொடுக்கல் வாங்கல், திருட்டு சம்பவங்கள் காதலில் உண்டாகும் போட்டிகள், இன, மத குரோத நடவடிக்கைகள் பல கொலைக-ளுக்கு காரணமாய் அமைகின்றன.

மறு வளமாக தற்கொலைகளும் மனித உயிர்களை ஏராளமாக பறிப்பது கவலையளிப்பதாக உள்ளது.

தற்கொலைகளுக்கு பிரதான காரணம் என்று குறிப்பிடக்கூடியது காதல் விவகாரம் தான். காதல் தோல்வியை ஏற்கும் மனோபாவம் எமது இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் அருகி வருகின்றது. எனவே அவர்கள் தற்கொலையை தெரிவு செய்கின்றார்கள். அண்மையில் தெலுங்கு தொலைக்காட்சியான ஜெமினி மியூசிக்கில் நிகழ்ச்சி தொகுப்பாளரான அழகிய இளம் பெண் நிரோஷா புதுவிதமான முறையில் தற்கொலை செய்துள்ளார். அச்செய்தி இணையத்தில் கீழ் குறிப்பிடப்படும் தலைப்பில் வெளியானது.

"கனடாவில் இருந்து காதலர் கதற கதற ஸ்கைப்பில் தற்கொலையை லைவ் செய்த தெலுங்கு டி.வி தொகுப்பாளினி நிரோஷா!"

மனம் எப்படி பதைபதைக்கின்றது என்று பாருங்கள். காதலருக்கே அந்த நிலைமை என்றால் அன்பையும் பாசத்தையும் கலந்தூட்டி வளர்த்த பெற்றோரது நிலை எப்படி இருக்கும்! பிள்ளைகள் அவசரப்படாது சற்று சிந்திக்க வேண்டும்.

அண்மையில் சாய் பிராசாத் என்னும் சின்னத்திரை நடிகர் தற்கொலையை தெரிவுசெய்துள்ளார். அவர் முன்னர் ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்த நிலையில் மற்றொரு பெண்ணை காதலித்து கைப்பிடித்திருந்தார். தனது சாவிற்கு மனைவி காரணமல்ல என்று தனது கடிதத்தில் எழுதியிருந்தால் கூட குடும்ப பிணக்கு அவரை மிகவும் வேதனையடைய செய்திருந்தது என்பதை புரிந்து கொள்ள முடிந்துள்ளது.

பலர் தீராத நோய்காரணமாக தற்கொலை செய்கின்றார்கள். நோய் குணமானபாடும் இல்லை, வாழவும் முடியாது. அதனால் கருணைக் கொலைக்கு விண்ணப்பிப்ப-வர்களும் உண்டு. அனுமதி கிடைக்காத-வர்கள் தற்கொலையை தெரிவு செய்கின்றார்கள்.

பல குடும்பங்களில் வருவாய் அற்ற நிலையில் பிள்ளைகளும் அதிகம் பேர் இருப்பார்கள். கணவனுக்கும் ஏதாவது நடந்துவிட்டிருக்கும். பசியும் பட்டினியும் தான் வாழ்கை என்றாகிவிட்ட நிலையில் அக்குடும்பம் தற்கொலையை தெரிவு செய்கின்றது.

தற்கொலை செய்பவர்கள் விடயத்தில் உள்ள பரிதாபம் என்னவென்றால் அவர்கள் இளகிய இதயமுடையவர்களாக இருக்கின்றார்கள். தாம் விரும்பும் விடயத்தை நிறைவேற்றும் திராணி அற்ற நிலையில் அவர்கள் தம்மை தாமே பழிவாங்கிக்கொள்கின்றார்கள். மற்றொரு பக்கம் பார்ப்போமாயின் அவர்களது பிடிவாதமும் அவர்களை பழிவாங்கி விடுகின்றது.

தற்கொலை செய்பவர்கள் சார்பாக ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். பல சந்தர்ப்பங்களில் தாம் தற்கொலை செய்துவிடப்போவதாக விரட்டுபவர்கள் அல்லது தற்கொலை செய்ய எத்தனிப்ப-வர்கள் என்றோ ஒருநாள் எம்மை ஆழாத்துயரில் ஆழ்த்திவிட்டு நிஜத்திலேயே தற்கொலை செய்து கொண்டு எம்மை விட்டுப் பிரியப்போவது மட்டும் உறுதி.!




## மன்னிப்பு கோராமையால் வழக்கு

அமெரிக்காவை சேர்ந்த பெண் நோயாளி ஒருவர் தனது தவறான சிகிச்சை அளித்த மருத்துவமனை நிர்வாகம் மீது வழக்கு தொடர்ந்துள்ளார். கடந்த ஆண்டு விலா எலும்பில் ஏற்பட்ட அசௌகரியம் காரணமாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவர்கள் தவறான சிகிச்சையளித்துள்ளனர். எனினும் நிர்வாகத்தின் சார்பில் மன்னிப்பு கேட்டு முழு விளக்கம் அளிக்காமையே இந்த வழக்கு தொடரப்படுவதற்கு முக்கிய காரணமென அவர் தெரிவித்துள்ளார்.

## நிலையத்தினுள் திணறிப்போன பயணிகள்


லண்டன், தெற்குப் பகுதியில் அமைந்துள்ள சட்டன் ரயில் நிலையத்தில் நிலைய ஊழியர்கள் இரவில் வேறு ரயில்கள் வர வாய்ப்பு இல்லை என நினைத்து ரயில் நிலையத்தின் வெளியேறும் வாயிலை மூடிவிட்டு சென்றுள்ளனர். ஆனால் விக்டோரியா ரயில் நிலையத்தில் இருந்து வந்த பயணிகள் ரயில் அதிகாலை 1.30 மணியளவில் சட்டன் ரயின் நிலையத்தில் வந்து சேர்ந்துள்ளது.

இதனிடையே வெளியேறும் வாயில் மூடப்பட்டிருந்ததால் பயணிகள் அனைவரும் நிலையத்தின் உள்ளேயே சிக்கிக்கொண்டனர். இதனையடுத்து வெளியேறும் வாசல் சட்டரை மெதுவாக உடைத்து ஒவ்வொரு பயணிகளாக வெளியேறியதாக கூறப்படுகிறது.

இதனிடையே தெற்கு ரயில்வே நிர்வாகம் சட்டன் நிலையத்தில் ஊழியர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ளது.



## இனி வர்ண நிறமோ... சின்னங்களோ இல்லை!!!



பிரான்ஸ் நாட்டில், சிகரெட் உற்பத்தியை மேற்கொள்ளும் நிறுவனங்களின் முத்திரைகளோ, வண்ண நிறங்கள் இல்லாத பெட்டிகளில் மட்டுமே சிகரெட் விற்பனை செய்ய வேண்டும் என்ற அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சிகரெட் பெட்டிகளின் அழகால் புகைப் பிடிப்போர் கவரப்படுவதைத் தவிர்க்கவும், புகைப் பிடிக்கும் பழக்கத்தைக் குறைக்கவும் இந்த உத்தரவை பிரான்ஸ் அரசு பிறப்பித்துள்ளதாக தெரியவருகின்றது. எனினும், இந்தத் தீர்ப்பை எதிர்த்து வழக்கு தொடரப்போவதாக ஜப்பான் டொபாக்கோ இன்டர்நேஷனல் நிறுவனத்தின் பிரான்ஸ் பிரிவு அறிவித்துள்ளது.

முன்னதாக இந்த திட்டம் தற்போது அவுஸ்திரேலியாவில் புழக்கத்தில் உள்ளது. தற்போது அந்நாட்டில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## விமர்சனம்

## “தோழா”

நடிகர்: கார்த்தி
நடிகை: தமன்னா
இசை: கோபி சுந்தர்
ஒளிப்பதிவு: வினோத்
இயக்கம்: வம்சி

அடுத்த வார இதழில்



## திரை விமர்சனம் “போக்கிரி ராஜா”

நடிகர் : ஜீவா
நடிகை : ஹன்சிகா
இசை : இமான்
இயக்குனர் : ராம் பிரகாஷ் ராயப்பா



நாம் இதுவரை எத்தனையோ அதீத சக்தி பெற்ற மனிதர்கள் கதைகளை படங்களில் பார்த்திருப்போம். ஆனால் இப்படி தூக்கம் வருவதற்கு முன் வரும் கொட்டாவியை ஒரு சக்தியாக மையப்படுத்தி எதிலும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. நாயகன் ஜீவாவிற்கு தான் இந்த சக்தி. தொடக்கத்திலிருந்து இது இவருக்கு பிரச்சனையாகவே உள்ளது. இதனால் தன் காதலி, சில வேலைகள் என தன் வாழ்வின் முக்கியமான விடயங்களை இழக்க நேர்கிறது. பின் ஹன்சிகாவுடன் இணைந்து ஒரு பொதுசேவையில் ஈடுபடும் போது ஒரு பக்கம் சிபிராஜின் பகையை சம்பாதித்து மறுபக்கம் ஹன்சிகாவின் காதலை பெறுகிறார். இச்சம்பவத்தில் தன்னை அறியாமல் சிபிராஜை பொது இடத்தில் அவமானப்படுத்த பகை முற்றுகிறது. இதை தொடர்ந்து தன் அசாத்திய கொட்டாவியை கொண்டு வில்லனை எப்படி சமாளிக்கிறார் என்பதே படத்தின் மீதிக்கதை.

ஜீவாவிற்கு நச் என பொருந்தும் குறும்புத்தனமான கதாப்பாத்திரத்தில் பட்டையை கிளப்பியுள்ளார். அதிலும் கொட்டாவி வரும் காட்சிகளில் இவரின் முகபாவனை குட். இப்படத்தில் வரும் பப்ளி பப்ளி பாடலுக்கு ஏற்றார்போல், படம் முழுக்க மிகவும் பப்ளியாக வந்துபோகிறார் ஹன்சிகா.

சிபிராஜ் வித்தியாசமான வில்லனாக வந்து கலக்கியிருக்கிறார். இவருடைய நடிப்பு ஒவ்வொன்றும் இவரது அப்பா சத்யராஜை நினைவுபடுத்துகிறது.

கொட்டாவியை வைத்து இந்த படத்தில் ஒரு புது மெசேஜை சொல்ல வந்திருக்கிறார் இயக்குனர் ராம்பிரகாஷ் ராயப்பா. தனது முந்தைய படத்திற்கு முற்றிலும் மாறுபட்ட வித்தியாசமான முயற்சியை கையிலெடுத்தற்கு பாராட்டுக்கள் தெரிவிக்கலாம்.

டி.இமானின் பின்னணி இசைக் படத்திற்கு பலம் சேர்கிறது. பாடல்களும் ஆட்டம் போட வைக்கிறது. ஆஞ்சநேயனின் ஒளிப்பதிவு மிகவும் கலர்புல்லாக இருக்கிறது.

மொத்தத்தில் போக்கிரி ராஜா காமெடி கிங்.

=::=::=::=::=::=::=::=::=::=::=::=::=

## தலயா? தளபதியா? சித்தார்த் ஓபன் டாக்

தமிழ் சினிமாவில் வளர்ந்து வரும் அனைத்து நடிகர்களுக்கும் விஜய், அஜித் தான் முன் உதாரணம். பலரும் தங்கள் படத்தின் விளம்பரங்களுக்கு இவர்கள் பெயரை பயன்படுத்தி கொள்வார்கள்.அந்த வகையில் சமீபத்தில் வைரலாகும் ஒரு வீடியோ சித்தார்த் கூறும் தலயா? தளபதியா? தான். ஆர்வமாக இந்த என்ன என்று பார்த்தால், தலயா? தளபதியா? இரண்டு பேருமே வாக்களிப்பார்கள். அப்போ நீங்க எப்படி? போங்க நாட்டோட தலையெழுத்தையே தீர்மாணிக்கின்ற தேர்தல் வருகிறது, மறக்காமல் வாக்களியுங்கள் என சித்தார்த் கூறி முடிக்கின்றார்.

=::=::=::=::=::=::=::=::=::=::=

## ஜெய்யின் பேய் மோகம்

ஜெய், சுரபி நடிப்பில் உருவான புகழ் படம் கடந்த வெள்ளியன்று திரைக்கு வந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இப்படத்தை தொடர்ந்து ஜெய் தற்போது பேய் படத்தில் நடிக்கவிருக்கிறார். அறிமுக இயக்குநர் சினிஷ் இயக்கும் இந்தப் படத்தில் ஜெய் மூன்று வெவ்வேறு வேடங்களில் நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக நடிக்கும் நடிகையின் தேர்வு நடை பெற்றுக் கொண்டு இருக்கிறது.1989 ஆம் ஆண்டை பின்னணியாகக் கொண்டு தயாரிக்கப்படும் இந்தப் படம் கொடைக்கானலில் படமாக்கப் பட உள்ளது. சரவணன் ஒளிப்பதிவைக் கவனிக்க, ஷாருபன் படத்தொகுப்பு செய்ய,திலிப் சுப்பராயன் சண்டை பயிற்சியில்,ஷெரிப் நடனம் அமைக்க, உருவாகும் இந்தப் படத்துக்கு இசை அமைப்பாளர் தேர்வு நடை பெற்றுக் கொண்டு இருக்கிறது.

## ஓங்கி அறைந்த சன்னி லியோன்

சன்னி லியோன் என்றாலே சர்ச்சைக்கு பஞ்சம் இருக்காது. சமீபத்தில் ஒரு தொலைக்காட்சியில் கூட கேட்ட சர்ச்சை கேள்விக்கு எல்லாம், நிதானமாக பதில் அளித்தார்.இதை தொடர்ந்து இன்று ஒரு நிருபர் இவரிடம், இரவு நிகழ்ச்சிக்கு எவ்வளவு பணம் வாங்குகிறீர்கள் என கேட்டார்.உடனே கோபமாக அந்த நிருபர் கண்ணத்தில் அறைந்தார், இதுக்குறித்து சன்னி லியோன் கணவரும் சரியான பதிலடி கொடுத்துள்ளார், இதில் எந்த தவறும் இல்லை என தெரிவித்துள்ளார்.

=::=::=::=::=::=::=::=::=::=::=

## ஏண்டா ஜெயிச்சோம்ன்னு இருக்கு

சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் ஆனந்த் வெற்றி பெற்றது அனைவரும் அறிந்ததே. ஆனால், அதை தொடர்ந்து வெளிவந்த செய்திகள் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.ஆனந்த் ஏற்கனவே படங்களில் பாடியவர், இந்த தொலைக்காட்சி மக்களை ஏமாற்றிவிட்டது என கூறினர். இதுக்குறித்து ஆனந்த் கடந்த இரண்டு தினங்களாக நான் கொண்டாட்டத்தின் உச்சத்தில் இருந்திருக்க வேண்டும். கடினமாக உழைத்துப் பெற்ற வெற்றியை மகிழ்ச்சியாகக் கொண்டாடி இருக்க வேண்டும். ஆனால் இந்த வெற்றி எனக்கு அப்படியான ஒரு சந்தோஷத்தைத் தரவில்லைஇந்த தருணத்தில் எனக்கு ஆதரவாக இருந்த மக்களுக்கும், தொலைக்காட்சிக்கும் நன்றி, நான் பல இசையமைப்பாளர்கள் வீட்டிற்கு முன் வாய்ப்பிற்காக தெருவில் நின்று [illegible] இருந்தேன், ஆனால், தற்போது மிகவும் கஷ்டமாக உள்ளது என [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## சுவாசத்தின் ஊடாக நோய்களைக் கண்டறியும் புதிய சாதனம்


மனித உடலில் ஏற்படக்கூடிய பல நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல் மிகவும் கடினமாகும். இவ்வாறான நோய்களை நாளடைவில் கண்டறிந்த பின்னர் அவற்றிற்கான



சிகிச்சைகளை வழங்குவதில் ஏற்படும் இடர்களை நீக்க புதிய தொழில்நுட்பம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கொரிய ஆராய்ச்சியாளர்களினால் உருவாக்கப்பட்ட Biosniffer எனும் அல்ட்ரா சென்சிட்டிவ் உடைய இக் கருவியானது வெளிச் சுவாசத்தினை பரிசீலித்து நோய்களை கண்டறியக்கூடியதாக காணப்படுகின்றது.

ஸ்மார்ட் மொபைல் சாதனங்களுடனும் இணைத்துப் பயன்படுத்தக்கூடிய இச் சாதனத்தின் ஊடாக நீரிழிவு நோய், சிறுநீரகக் கோளாறுகள், நுரையீரல் புற்றுநோய் போன்றவற்றினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய முடியும்.




## சியோமி அறிமுகப்படுத்திய Mi TV 3S தொலைக்காட்சி!

சியோமி நிறுவனம் அதன் தொலைக்காட்சி வரிசையில் புதிய Mi TV 3S தொலைக்காட்சியை அறிமுகப்படுத்தியுள்ளது.

Mi TV 3S தொலைக்காட்சி, 65 இன்ச் “வளைந்த“ 4K பேனல் மற்றும் 43 இன்ச் Flat FHD பேனல் ஆகிய இரண்டு வகைகளில் வருகிறது.

சியோமி Mi TV 3S தொலைக்காட்சியில் 65 இன்ச் வளைந்த Display கொண்ட 4K தீர்மானம் கொண்டுள்ளது.


இது Mstar 6A928 டிவி ப்ராசசர், 2ஜிபி ரேம், 8ஜிபி உள்ளடங்கிய சேமிப்பு மூலம் இயக்கப்படுகிறது.

இதில் டால்பி மற்றும் DTS ஆடியோ டுயல் டிகோடிங்(Dolby and DTS audio) ஆதரவு வழங்குகிறது.

43 இன்ச் ஆன TV 3S வகை 10.9mm அல்ட்ரா தின் மெட்டல்(Ultra Thin Metal) பாமி மற்றும் Frame கொண்டுள்ளது.

இது 1920x1080 பிக்சல்கள் தீர்மானம் கொண்ட KO HD TV ஆகும். இதில் Mstar 6A908 ப்ராசசர், 1ஜிபி ரேம் மற்றும் 8ஜிபி உள்ளடங்கிய சேமிப்பு மூலம் இயக்கப்படுகிறது.

மேலும் இந்த தொலைக்காட்சியில் டால்பி DTS ஆடியோ டுயல் டிகோடிங் ஆதரவு வழங்குகிறது. இந்த இரண்டு வகைகளிலும் ஆண்ட்ராய்டு MIUI மூலம் இயங்குகிறது.



## யேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால் Smartphone க்கான APP வெளியீடு!

யேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியம் தமிழ் கத்தோலிக்க மக்களின் ஆன்மீக நலன் கருதி Tamil Catholic Daily , Bible Quiz Tamil, Bible Quiz Competitions, Bibel Quiz Wettbewerb என்னும் Android Smartphone க்கான Application கள் கடந்த 19.03.2016 சனிக்கிழமை அருட்பணி. அந்தோனி பெர்ணான்டோ பெனட் அவர்களின் பிரியாவிடை வைபவத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

Tamil Catholic Daily என்னும் இனை அருட்பணி. அந்தோனி பெர்ணான்டோ பெனட் அவர்களும் Bible Quiz Competitions என்ற APPஇனை அருட்பணி. S. J. இம்மானுவேல் அடிகளாரும் Bibel Quiz Wettbewerb என்ற APPஇனை அருட்பணி.அல்பேர்ட் கோலன் அவர்களும் Bible Quiz Tamil என்ற APPஇனை அருட்பணி.நிரூபன் தார்சீசியஸ் அவர்களும் வெளியிட்டு வைத்தனர்.

Android Smartphone க்கான Application களை PlayStore இல் Tamil Catholic Daily , Bible Quiz Tamil> Bible Quiz Competitions, Bibel Quiz Wettbewerb என தேடுவதன் மூலம் அல்லது பின்வரும் Linkfis Click செய்வதன் மூலம் தரவிறக்கம் செய்யலாம்.




OTHER

## உலகின் முதலாவது சோலார் விமான நிலையம் சேவை வழங்க தயாராகிறது

கடந்த வருடம் முற்று முழுதாக சோலார் எனர்ஜியில் செயல்படக்கூடியதாக இந்தியாவின் கொச்சின் விமான நிலையம் மாற்றப்பட்டுவருவதாக செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இந்நிலையில் தற்போது மூன்றாம் நபர்களினால் வழங்கப்படும் மின்சக்தியை தவிர்த்து முற்று முழுதாக தாமே உற்பத்தி செய்யும் சூரிய மின்சக்தி மூலம் செயற்பட குறித்த விமான நிலையம் தயாராகி வருகின்றது. சோலார் படலங்கள் 3 வருடங்களுக்கு முன்னரே நிறுவப்பட்டிருந்த போதிலும் கடந்த வருடமே சூரிய சக்திய மூலமான மின்சக்தியின் தேவை உணரப்பட்டிருந்தது.


இதனைத் தொடர்ந்து ஜேர்மன் நிறுவனம் ஒன்றின் உதவியுடன் 45 ஏக்கர் பரப்பளவிற்கு இந்த சோலார் கலங்கள் பொருத்தப்பட்டுள்ளன.



குறித்த விமான நிலையத்திற்கு நாள் ஒன்றுக்கு 48,000 தொடக்கம் 50,000 வரையான கிலோவாற்ஸ் மின்சக்தி தேவைப்படுகின்றது. இதன் காரணமாக மேலும் சூரிய படலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்தியாவில் சூரிய படலங்கள் மூலம் மின் உற்பத்தி செய்யும் பிரதான நகரங்களாக கொல்கத்தா, கொச்சின் என்பன விளங்குகின்றன. இதனால் இப் பகுதிகளில் கார்பன் கழிவுகளின் எண்ணிக்கை வெகுவாக குறைவடையும். இதேவேளை உலகில் அதிகளவு கார்பன் கழிவுகளை வெளியேற்றும் 20 நாடுகளின் நகரங்களுள் இந்தியா 13வது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதி நவீன கழிப்பறை


கடந்த 2012ம் ஆண்டு மைக்ரோசொப்ட் நிறுவுனர் பில்கேட்ஸ் தனது மெலின்டா கேட்ஸ் பவுண்டேசன் ஊடாக Nano Membrane கழிப்பறையினை உருவாக்கும் முயற்சியினை ஆரம்பித்து வைத்தார். Cranfield பல்கலைக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இத் திட்டத்திற்காக சுமார் 710,000 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. ஐந்து வருடங்களின் பின்னர் தற்போது குறித்த முயற்சி வெற்றியளித்துள்ளது. நீர் இன்றி செயற்படக்கூடிய இந்த கழிப்பறை ஆனது மனிதக் கழிவிலிருந்து சக்திகளை பிறப்பிக்-கவல்லது.



மிகவும் மலிவான விலையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த கழிப்பறை ஆனது நீண்ட காலம் பயன்படுத்தக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதேவேளை மார்ச் 22ம் உலக நீர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் உலகெங்கிலும் 2.4 பில்லியன் மக்கள் நீர் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளதாகவும், இவ்வாறானவர்களுக்கு இந்த நவீன கழிப்பறைகள் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இராட்சத காற்றாடியை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள்

காற்று மூலம் மின்னை உற்பத்தி செய்வதற்காக இராட்சத காற்றாடி ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.



இந்த காற்றாடியின் பிளேட்கள் (Blades) ஒவ்வொன்றும் 200 மீற்றர்கள் நீளம் உடையதாக இருப்பதுடன், 400 மீற்றர்கள் விட்டம் உடைய வட்டத்தினை உருவாக்கவல்லன. இது தவிர சுமார் 479 மீற்றர்கள் உயரமாக அமைக்கப்படவுள்ள இந்த காற்றாடியானது நியூயோர்க்கில் அமைக்கப்பட்டிருக்கும் Empire State கட்டிடத்தினை விடவும் 30 மீற்றர்கள் உயரமானது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இதன் ஊடாக 50 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாகவும், இது பாரம்பரிய காற்றாடிகளை விடவும் 25 மடங்கு வினைத்திறன் உடையது எனவும் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். எனினும் தற்போது இந்த காற்றாடியின் 1/10 அளவிடையினைக் கொண்ட மாதிரிக் காற்றாடி அமைக்கப்பட்டுவருகின்றது. இதன் கட்டுமாணப் பணிகள் 2019ம் ஆண்டு நிறைவுக்கு கொண்டுவரப்பட்டு பரிசோதிக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண மானவனின் மனது

வேதனை என்னவென்றால் பல மாபெரும் கலைஞர்களுக்கும், மனிதர்களுக்கும், கல்விமான்களுக்கும் மேலே கூறப்பட்ட நெகிழ்ச்சித்தன்மை இல்லாதிருப்பதே ஆகும். தற்பெருமையும், அதீத சுயநம்பிக்கையும் தேவைக்கு அதிகமாகும் போது வரட்டுக் கௌரவம் அதிகரித்து, நெகிழ்ச்சித்தன்மை அற்றுப் போகிறது. இதுவே வளர்ச்சியை தேக்கநிலையடையவைக்கிறது.

அண்மையில் ஒரு பேராசிரியரை எனது நண்பர் ஒருவர் சந்தித்தார். அப்பேராசிரியர் தமிழர்களிடத்தில் மட்டுமல்ல, இலங்கையிலும், வேறு பல நாடுகளிலும் தனது ஆராய்ச்சிகளை மேற்கொண்டு தனக்கென்றொரு தனி இடத்தை கல்விமான்களுக்கிடையில் பெற்றுக் கொண்டவர். பல் மொழி வித்துவர். தலைசிறந்த அறிஞர்.

எனது நண்பரோ நோர்வேயில் 27 வருடத்திற்கும் அதிகமாக வசிப்பவர். நோர்வே கலாச்சாரத்தின் அடிப்படையிலேயே சிந்திப்பவர். அவரின் பேச்சும் நோர்வேஜிய சிந்தனையோட்டத்தை அடிப்படையாகக்கொண்டது. குறிப்பிட்ட அந்த பேராசிரியர் நோர்வேக்கு வந்து 5 - 6 ஆண்டுகள் ஆகியிருப்பினும் அவரிடம் நோர்வேஜியப் புலமை இல்லை.

போராசிரியர் தமிழக்குழந்தைகளுக்கு தமிழின் தொன்மை, பெருமைபற்றி கற்பித்துக்கொண்டிருந்தார். அவரின் மொழியாடல் ஆங்கிலமும், தமிழும் கலந்திருந்தது. மாணவர்கள் தமிழ் கற்பதன் அவசியம் பற்றியும் கூறினார்.

என் நண்பருக்கு பேராசிரியர் சற்றேனும் நோர்வேஜிய அறிவு இல்லாதிருப்பதும், தமிழை சற்றெனும் அறிந்த குழந்தைகளிடம் அவர் தமிழ் கற்றுக்கொள்ளுங்கள் என்று கூறுவது இரட்டை நாக்கால் பேசுவதுபோல் இருக்கிறது என்றார், என்னிடம். அவரிடமே இதுபற்றிக் கேட்கலாமே என்றேன் நான். சம்மதித்தார்.

நண்பர், இடைவேளையின் போது சற்று காரமாகவே தனது கேள்வியைக் கேட்டார். பேராசிரியர் ஆம், நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. ஆனால் தனது தொழில், வயது, சூழ்நிலை போன்றவற்றினாலேயே தான் இம்மொழியை இன்னும் கற்கவில்லை. அதற்கான சந்தர்ப்பம் சூழ்நிலைவந்தால் நான் இம்மொழியை கட்டாயம் கற்பேன். நோர்வே மொழியை கற்கக் கூடாது என்று நான் நினைக்கவில்லை என்பதை மிகவும் அழகாகவும், பண்பாகவும், நெகிழ்ச்சித்தன்மையுடனும் விளக்கியபோது நண்பர் தனது விமர்சனம் தவறு என்று ஓரளவு புரிந்துகொண்டார். பேராசிரியருக்கும் அக் கேள்வி பலத்த சிந்தனையை தூண்டிவிட்டிருக்கும் என்பது எனது எண்ணம்.

இப்படியான ஒரு அறிஞர் ஒரு சாதாரண மனிதனின் விமர்சனத்துக்கு பணிவாக விடையளித்து உரையாடியது "நிறைகுடம் தளும்பாது" என்பதை உறுதிப்படுத்தியது.

சஞ்சயன் செல்வமாணிக்கம்

## விமர்சிப்பவன் எதிரியா??

விமர்சனத்தை தனிப்பட்ட தாக்குதலாக எடுக்காது, அதன் சாரம்சத்தை உணர்ச்சிகளை தவித்து, குழுவாதங்களை தவிர்த்து ஆறிவுபூர்வமாக சிந்திப்போமேயானால் பண்பட்ட, வளமான ஒரு சமுகமாற்றத்திற்கு நாம் அடித்தளமிடுகிறோம்.

இதைத் தவிர்த்து விமர்சனத்தை விஷம் என்று கருதி, விமர்சித்தவனையும் கோடாலிக்காம்பு என்று விமர்சித்து, குழுவாதங்களை மீண்டும் மீண்டும் நிறுவமுற்படுவது பண்பட்ட, வளமான சமூகத்தை நோக்கி இட்டுச்செல்லுமா என்றும் கேள்வியை உங்களிடமே விட்டுவிடுகிறேன்.


**நஞ்சற்ற நெஞ்சமே வளமான சமூகத்தின் சாரளம் என்பேன் நான்.**

**விமர்சனம் பற்றி உங்கள் கருத்து என்ன நண்பர்களே!**

---

விமர்சனத்தை எவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்பதை கீழுள்ள வரைபு அழகாகக் காட்டுகிறது. இந்த செயற்பாடு ஆறு பகுதிகளைக்கொண்டது.

- **செவிமடுத்தல்**
- **உள்வாங்கிக்கொள்ளுதல்**
- **விமர்சனம் பற்றிய உங்கள் கருத்தினை பகிர்தல்**
- **உண்மையான கருத்துக்களை ஏற்றுக்கொள்ளல்**
- **விமர்சித்தவருக்கு நன்றி தெரிவித்தல்**
- **நீங்கள் ஏற்றுக்கொண்ட விமர்சனக் கருத்துக்களுக்கேற்ப உங்களை மாற்றிக் கொள்ளல்.**
- **மீண்டும் 1வது இலக்கத்திற்கு செல்லல்.** (இது ஒரு தொடர்ச்சியான செயற்பாடு)




**முற்றும்**

---

## இப்படியும் நடக்குமா!!

(தன்யா)




திருகோணமலை மாவட்டத்தில் நகர்ப்புறத்தில் இடம்பெற்ற உண்மை சம்பவம்!!!

குறிப்பிட்ட இந்த வீட்டை திரு. திருமதி சுபராஜ் அவர்கள் மூன்று வாரங்களுக்கு முன்னராக கோடிக்கும் அதிகமான பணம் கொடுத்து வாங்கியிருந்தனர். வீட்டில் வாடகைக்கு இருந்தோர் எழும்பியதும் தமது வீட்டை புதியது போன்று அலங்கரித்து குடியும் புகுந்தனர். அங்கு மொத்தமாக அறுவர் வசித்தனர்.

அங்கு குடியேறிய முதல் நாள் அனைவரும் அசதி மிகுதியால் தம்மை மறந்து உறங்கிப் போயினர். எனினும் அடுத்தடுத்த நாட்களில் ஏதேதோ அசம்பாவிதங்களை உணரத் தொடங்கினர். எனினும் யாரும் யாருடனும் கலந்தாலோசிக்காது தத்தமது மனதிற்குள்ளேயே வைத்திருந்தனர். பொறுத்துப் பொறுத்து இயலாமல் ஒருவர் ஆரம்பித்தவுடன் அனைவரும் தாம் அனுபவித்ததை தெரிவித்தனர். குடும்பத் தலைவன் சுபராஜ் தலையில் கை வைத்தான். அவன் மனைவியைப் பார்த்து நீ கண்டி சென்றிருந்த போது, நடு இராத்திரியில் நீ என்னருகில் படுத்திருந்தாய், தூக்கக் கலக்கத்தில் வந்திட்டியாடி என் பொண்டாட்டி என கையை மேலே போட்ட போது அது காணாமல் போயிருந்தது. என்றான். இவ்வாறு அனைவரும் தாம் கண்டவற்றை கூறினர்.

அவர்களின் மகள் அவளுக்கு ஏழு வயது தான் ஆகின்றது. அன்று சனிக்கிழமை அனைவரும் மறுநாள் விடுமுறை என்பதனால் பிச்சைக்காரன் திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்தனர். மெல்ல சலங்கை சத்தம் கேட்டது. உடன் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். மனைவி, அது அந்த பக்கத்து வீட்டு பெண், காளி கோவில் திருவிழாவிற்கு சென்று விட்டு வருகின்றாள். நேற்றும் இந்த சத்தம் கேட்டு நான் சென்று பார்த்த போது அவள் வீதியால் தனியே சென்று கொண்டிருந்தாள் என்றாள்.

உடன் சுபராஜ், கோவில் திருவிழா பிரசங்கம் நள்ளிரவு 12.30 மணி வரை நிகழ்கிறதா? இதில் ஏதோ இருக்கின்றது. என மெல்ல வெளியே எட்டிப் பார்த்தான். தலைவிரி கோலமாக தலை முழுதும் மல்லிகைப்பூ மாலையும் சூடி பக்கத்து வீட்டு ஷோபனாவே தான். "ஷோபனா" என கூப்பிட்டான். மனைவி ஓடி வந்து வாயைப் பொத்தினாள். அவளையும் மீறி இரண்டாவது தடவையும் கூப்பிட்டான். .........

"என்னடா" என்றவாறு திரும்பியது அந்த பெண் உருவம். அழகிய ஷோபனா உருமாறி இருந்தாள். பூட்டப் பட்டிருந்த கதவு பூட்டியவாறே இருந்தது. அவர்கள் முன் வந்து நின்றது அந்த பயங்கரமான அருவறுப்பு உருவம்.

தன் மனைவியை உள்ளே தள்ளிவிட்டான் சுபராஜ். தானும் பின்நோக்கிவாறே காலை வைத்து சட்டென வீட்டின் கதவை சாத்தினான். அது வெளியில் நின்று சத்தமிட்டு சிரித்தது. கதவை சாத்தினாள் உள்ளே வர இயலாதா சுப்பு என அவள் மனைவி அழைப்பது போல் அழைத்தது அவ்வுருவம்.

இவ்வாறு ஒவ்வொரு நாளும் ஏதோவொரு அசம்பாவிதம் நடந்தேறியது. கோடிக்கணக்கில் காசு கொடுத்து வீட்டை வாங்கி அதில் நிம்மதியாக வசிக்க முடியவில்லையே என எண்ணிக் கொண்டனர் அக்குடும்பத்தினர்.

இவ்வாறிருக்க சுபராஜ் அன்று வேலையில் இருந்து சீக்கிரமே வீடு திரும்பி இருந்தான். காரணம் ஏதுமின்றி மனைவி மற்றும் தன் தாயுடன் வாய்த் தர்க்கம் செய்தான். அவனது சுபாவம் இதுவல்லவே என அனைவரும் ஏங்கிப் போயினர். இனியும் பொறுத்திருந்து வேலையில்லை என்றவாறு தாயார் வெளியில் புறப்பட்டார்.

சென்றது இந்தியாவில் இருந்து வந்திருந்த ஒரு சாத்திரியிடம்.

தொடரும்

## உப்புக்கு நிலவும் தட்டுப்பாடு தெரியுமா உங்களுக்கு!!!!!

கடந்த வருடம் (2015ம் ஆண்டு) இறுதிப் பகுதியில் ஏற்பட்ட அதிக மழை காரணமாக எமது நாட்டிலும், எமது தொப்புள் கொடியுறவுகள் வாழும் நாடான இந்தியாவில் சென்னையிலும் மிகவும் மோசமான நிலையில் மக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகினர். குறிப்பாக உப்பு விளை நிலங்கள் பல இருந்தும் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் பல இடங்கள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புத்தளம், அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை போன்ற பகுதிகளில் அண்மித்த காலமாக உப்பு உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்பட்டு வந்தாலும் பெருமளவு உப்பளங்கள் வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளானமையினால் உப்பு, சந்தைக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இப்படியான ஒரு தட்டுப்பாடு உப்புக்கு என்றுமே நிலவியது கிடையாது என பொதுவாக பேசப்படுகின்றது.


களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்த உப்பு பொதிகள் இவ்வாண்டின் காலாண்டுப் பகுதிக்குள்ளேயே நிறைவடைந்து விட்டிருப்பது கண்கூடு. ரூபா 40 என விலையிடப்பட்டிருந்த 1கி.கி கட்டி உப்பு, மொத்த வியாபார நிலையங்களில் ரூபா 22க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. எனினும் தட்டுப்பாடு நிலவி வரும் இக்காலத்தில் ரூபா 32.50 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

உள்நாட்டு உற்பத்தியில் தட்டுப்பாடு நிலவினால் நன்றாகவா இருக்கும்! அது எம்மையே குறைகாண வைத்து விடுமல்லவா?

இருப்பினும் பண்டம் விலைப்பதில் கொள்வனவாளர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள் என்று பலரும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது தட்டுப்பாட்டை தாண்டி பொருள் விற்பனைக்கு இல்லை என்றாகி விட்டமை குறிப்பிடத்தக்கது.

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என சும்மாவா சொன்னார்கள்? நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த எம்நாட்டு நிலப்பரப்பில் கரையோர மாவட்டங்கள் இதற்கு என்ன செய்யப்போகின்றது?

இதற்கான மாற்று வழிகள் உடன் கண்டறியப்பட்டு செயற்படுத்தப்பட்டு உப்பளங்கள் துரித கதியில் சரி செய்யப்பட்டு, அல்லது புதிதாக உருவாக்கப்பட்டு அனைவரும் பயனடையக் கூடிய வகையில் ஆவணை செய்யுமாறு சம்பந்தப்பட்டோரை மக்கள் சார்பாகவும், வியாபாரிகள் சார்பாகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.



- - மலைநேயன் - -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விகாரைக்குள் இருந்து நல்லிணக்கம் வருமா?

நிலாந்தன்
www.tamilkingdom.com

அண்மை நாட்களில் அரசுத்தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஒரு விடயத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். "நல்லிணக்கம் தொடர்பான செய்தியை வடக்குக்கு எடுத்துச்செல்வதிலும் பார்க்க தெற்கிற்கே கொண்டு செல்ல வேண்டும்" என்பதே அது. கடந்த புதன் கிழமை பண்டாரநாயக்கா ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அவர் ஒரு மாநாட்டில் உரையாற்றி இருக்கிறார்.

கலை இலக்கியத்தை அனுபவிப்பது தொடர்பான ஒரு மாநாடு அது. அதில் அவர் நல்லிணக்கத்திற்கான செய்தியை தெற்குக்குக் கொண்டு செல்லுமாறு இலக்கியவாதிகள், கலைஞர்கள் ஊடகவியலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். "அரசியல்வாதிகளால் மட்டும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது மதத்தலைவர்கள், கலைஞர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் போன்றோரும் இதில் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்ற தொனிப்பட அவர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதைப்போலவே இம்மாதத் தொடக்கத்தில் அவர் சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை சங்கத்தின் பொதுச் செயலாளரான எல்ஹாட் அசீயை சந்தித்தபோதும் நல்லிணக்கத்தை மக்கள் மத்தியில் இருந்தே கட்டியெழுப்ப வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். வெளிநாட்டுச் சக்திகளால் நல்லிணக்கத்தை திணிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 12ஆந் திகதி சனிக்கிழமை தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 700 ஏக்கர் காணிகள் மற்றும் நடேஸ்வராக் கல்லூரி, நடேஸ்வரா கனிஸ்ட வித்தியாலயம் ஆகியவை அரசுத்தலைவரால் பொதுமக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பேசிய மைத்திரி, "நாங்கள் தேசிய நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றோம். எல்லோரும் தேசிய நல்லிணக்கம் என்றவுடன் அது பற்றிப் பேச வடக்கிற்கே வருகின்றார்கள். முதலில் நல்லிணக்கம் பற்றி தென்னிலங்கை மக்களிற்கே புரியவைக்கவேண்டும். தென்னிலங்கை மக்களின் மனங்களை சில கடும் போக்குவாதிகள் மாற்ற முற்படுகின்றார்கள்" என்று கூறியுள்ளார்.

உண்மைதான் நல்லிணக்கம் எனப்படுவது கீழிருந்து மேல்நோக்கியும் மேலிருந்து கீழ்நோக்கியும் மேற்கொள்ளப்படவேண்டிய ஒரு செய்முறை தான். அதை அரசியல்வாதிகளால் மட்டும் செய்ய முடியாது. அதில் சமூகத்தின் கருத்துருவாக்கிகளாகக் காணப்படுகின்ற அல்லது சமூகத்தின் மீது ஏதோ ஒரு விதத்தில் தீர்மானகரமான செல்வாக்கைச் செலுத்துகின்ற தரப்பினர் என்று கருதத்தக்க அனைவரும் பங்கேற்க வேண்டும்.

உலகின் வெற்றிபெற்ற நல்லிணக்க முன்னுதாரணமாகக் காட்டப்படும் தென்னாபிரிக்காவில் அவ்வாறுதான் நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை அரசாங்கமும் இது தொடர்பில் தென்னாபிரிக்காவிடம் உதவி கேட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு நிலைமாறுகாலகட்ட நீதி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்காக தென்னாபிரிக்காவிற்குச் சென்றுவந்த ஒரு தமிழ் செயற்பாட்டாளர் "தென்னாபிரிக்கா நல்லிணக்கத்தை விற்கிறதா?" என்று கேட்டதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

நல்லிணக்க அனுபவங்களைப் பொறுத்தவரை இலங்கைத்தீவு வெளியாரிடம் கடன் வாங்கவேண்டிய தேவையே கிடையாது. ஏனெனில் நல்லிணக்கத்தைப் பற்றி பௌத்தம் போதிப்பதைவிடவும் கூடுதலாக வேறு யாரும் போதித்துவிட முடியாது. அகிம்சாமூர்த்தியான புத்தரிடமிருந்து நல்லிணக்கத்தைக் கற்காத ஒரு நாடு வேறு எவரிடமிருந்தும் அதைக் கற்க முடியாது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தவிர்க்கப்படவியலாத ஒரு பெரும் ஆய்வுப்பரப்பாகக் காணப்படுகிறது. ஏறக்குறைய முப்பதாயிரத்திற்கும் குறையாத பௌத்த துறவிகள் இங்குண்டு என்றும் கூறப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு நாடு நல்லிணக்கத்திற்காக வெளிச்சக்திகளிடம் கையேந்தி நிற்கவேண்டிய ஒரு நிலை ஏன் ஏற்பட்டது?

1980களின் நடுக்கூறளவில் ஓர் இந்திய ஊடகவியலாளர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனைப் பேட்டி கண்டார். "ஜெயவர்த்தனா ஒரு உண்மையான பௌத்தனாக இருந்திருந்தால் நான் ஆயுதம் ஏந்தவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது" என்று பிரபாகரன் ஒரு கேள்விக்குப் பதில் கூறியிருந்தார். ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன்னிருந்த அதே நிலைதான் இப்பொழுதும் பிரபாகரன் இல்லாத இலங்கைத்தீவில் நிலவுகிறதா?

கடந்த ஆண்டு நோர்வேயைச் சேர்ந்த ஒரு நண்பர் நோர்விஜிய திருச்சபையைச் சேர்ந்த ஒரு ஓய்வுபெற்ற போதகரை இக்கட்டுரை ஆசிரியருக்கு அறிமுகப்படுத்தினார். ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரணையோடு இலங்தைத்தீவின் நல்லிணக்க முயற்சிகளில் அவர் ஈடுபட்டு வருவதாகக் கூறப்பட்டது. இங்குள்ள பெரும்பாலான கிறிஸ்தவ திருச்சபைகளின் உயர்மட்டங்களோடு அவர் உரையாடி இருக்கிறார். தொடர்ந்தும் அதுபோன்ற உரையாடல்களில் ஈடுபட இருப்பதாகச் சொன்னார். அப்போது இக்கட்டுரை ஆசிரியர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

நல்லிணக்க முயற்சிகளை திருச்சபை வளாகங்களிலிருந்து தொடங்குவது வசதியானதே. ஏற்கனவே நிறுவனமயப்பட்டிருக்கிற திருச்சபைகளின் ஊடாக அதைச் செய்யும் போது பெரியளவில் புதிய கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டியிருக்காது. அதோடு மேற்கத்தேய பின்னணிகளைக் கொண்ட திருச்சபைகளுக்கூடாக நல்லிணக்கம் தொடர்பான மேற்கத்தைய பொறி முறைகளை முன்னெடுப்பது மிகவும் இலகுவானது. ஆனால் இதில் ஓர் அடிப்படைப் பிரச்சினை உண்டு.

திருச்சபைகளின் செயற்பாட்டை சிங்கள பௌத்த கடும்போக்குவாதிகள் எப்படிப் பார்க்கிறார்கள்? என்பதே அது. புலம்பெயர்ந்து வாழும் புலிகளின் ஆதரவாளர்களும், வெள்ளைப் புலிகளும் சேர்ந்து இலங்கைத் தீவுக்கு வகுப்பு எடுக்க முற்படுவதாக அவர்கள் சந்தேகிக்கக்கூடும். எனவே, மெய்யான பொருளில் இலங்கைத்தீவில் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதாகவிருந்தால் அதை விகாரைகளில் இருந்தே தொடங்கவேண்டும் என்று இக்கட்டுரை ஆசிரியர் மேற்படி நோர்விஜியப் போதகருக்குச் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்று ஒஸ்லோப் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆராய்சியாளருடனான சந்திப்பின் போதும் அவர் கேட்டார் "இலங்கைத்தீவின் நல்லிணக்க முயற்சிகளை எங்கிருந்து தொடங்கினால் அது பயன்பொருத்தமாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் இருக்கும்?" என்று. அதற்கு இக்கட்டுரையாசிரியர் சொன்னார், "விகாரைகளிலிருந்து" என்று.

நல்லிணக்கம் எனப்படுவது முதலாவதாகவும், முக்கியமானதாகவும் வென்றவர்களிடமிருந்தே தொடங்கப்பட வேண்டும். தென்னாபிரிக்க முன்னுதாரணமும் அத்தகையதுதான். இன ஒதுக்கற் கொள்கையால் ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை கறுப்பின மக்கள் அந்த ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை பெற்ற பின் முன்னெடுக்கப்பட்டதே தென்னாபிரிக்க நல்லிணக்கமாகும். அங்கு ஒடுக்கப்பட்ட மக்கள் தம்மை ஒடுக்கியவர்களை தண்டிப்பதை விடவும் மன்னிப்பதற்கு அதிகம் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அந்த செய்முறைக்கு மண்டேலா எனப்படும் ஒரு பேராளுமை தலைமை தாங்கியது. ஆனால் இலங்கைத்தீவின் நிலைமை அவ்வாறு உள்ளதா?

இங்கு வெற்றிபெற்ற தரப்பாகவும், பெரும்பான்மையாகவும் காணப்படுவது சிங்கள மக்கள் தான். சிங்கள மக்கள் மத்தியில் அபிப்பிராயங்களை உருவாக்கவல்ல சக்தியோடும், நிறுவன வலையமைப்போடும் காணப்படுவது மகாசங்கம் தான். இலங்கைத் தீவின் அரசியலை தீர்மானிக்கும் தரப்புக்களில் ஒன்றாகவும் மகாசங்கம் காணப்படுகிறது. சிங்கள பௌத்த மேலாண்மை வாதத்தின் அடிச்சட்டமாக இருப்பதும் மகாசங்கம் தான்.

இனப்பிரச்சினையின் மூல காரணம் சிங்கள பௌத்த மேலாதிக்கம் தான். இச்சிறிய தீவை ஏனைய சிறிய தேசிய இனங்களோடும், சிறிய மதங்களோடும் பங்கிடத் தயாரற்ற ஒரு மனோநிலையே அது. அந்த மனோநிலையில் மாற்றம் ஏற்படுவது என்றால் அதைப் பேணும் களமாகவும், பிரயோகிக்கும் களமாகவும் காணப்படும் விகாரைகளிலிருந்தே அதைத் தொடங்க வேண்டும். ஆனால் கடந்த ஏழு ஆண்டுகளாக அதை ஏன் செய்ய முடியவில்லை?

நல்லிணக்க முயற்சிகளில் பௌத்தத் துறவிகள் எப்படியான பங்களிப்புக்களை நல்க முடியும் என்பதற்கு கம்பூச்சியா ஒரு நல்ல உதாரணமாகக் காட்டப்படுகிறது. அங்கு ஒருபுறம் போர் நடந்துகொண்டிருக்கும் போதே இன்னொருபுறம் சமாதானத்திற்கான பாத யாத்திரைகளில் பௌத்தத் துறவிகள் ஈடுபட்டிருந்தார்கள். எனவே, குறைந்த பட்சம் கம்பூச்சிய உதாரணத்திலிருந்தாவது இலங்கைத்தீவு கற்றுக்கொள்ளத் தவறியது ஏன்?

ஆயுதமோதல்கள் முடிவடைந்த பின்னரும் ஒரு பொதுபலசேனாவை உற்பத்தி செய்யும் அளவிற்கே இலங்கைத்தீவின் நிலைமைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்ல கம்பூச்சியாவிடமிருந்து கற்றுக் கொள்வதற்குப் பதிலாக பர்மாவிலிருந்து பௌத்த அடிப்படைவாதிகளை அழைத்து விருந்தோம்பும் ஒரு நிலைமையே சில ஆண்டுகளுக்கு முன் காணப்பட்டது. **முஸ்லீம்களுக்காகப் பரிந்து பேசிய ஒரு பௌத்த துறவிக்கு சுன்னத்துச் செய்யும் ஒரு நிலைமையே சில ஆண்டுகளுக்கு முன் காணப்பட்டது.** இது விடயத்தில் சில மாதங்களுக்கு முன் இயற்கை எய்திய சோபிததேரர் போன்ற புறநடைகளை இலங்கைத்தீவில் மிக அரிதாகவே காணமுடிகிறது. இத்தகையதோர் பின்னணியில் விகாரைகளிலிருந்து நல்லிணக்கத்தை தொடங்க முடியுமா?

இந்த இடத்தில் புத்தரின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். நல்லிணக்கம், மன்னிப்பு போன்ற பலவற்றுக்கும் முன்னுதாரணமாகக் காட்டப்படும் ஒரு சம்பவம் அது.... ஒருநாள் புத்தர் ஓர் ஆற்றங்கரையில் தியானத்தில் அமர்ந்திருந்தார். ஆற்றில் குளிக்க வந்த ஒரு பிராமணர் புத்தரைக் கண்டார். பிராமணியத்திற்கு எதிராகவும், இந்திய சாதிக்கட்டமைப்பிற்கு எதிராகவும், சடங்குகளுக்கு எதிராகவும் போதித்துவரும் புத்தரைக் கண்டதும் பிராமணருக்கு சினம் பொங்கியது.

அவர் புத்தருக்கு நேரே போய் நின்று மோசமான வார்த்தைகளால் அவரைத் திட்டினார். புத்தர் அசையவில்லை. கண்களைத் திறக்கவுமில்லை. நிச்சலனமாகத் தியானத்தில் இருந்தார். பிராமணரால் பொறுக்க முடியவில்லை. புத்தரின் முகத்தில் காறித்துப்பிவிட்டு குளிப்பதற்காக ஆற்றில் இறங்கினார். குளித்துமுடித்தபின் தலையைத் துவட்டிக்கொண்டு திரும்பி வந்தார். புத்தர் அப்பொழுதும் அப்படியே அசையாமல் வீற்றிருந்தார்.

பிராமணர் துப்பிய எச்சில் புத்தருடைய முகத்தில் வடிந்து நாடிவழியாக ஒழுகிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் பிராமணரைத் திடீரென்று குற்ற உணர்ச்சி தாக்கியது. தவத்திலிருக்கும் ஒருவரின் முகத்தில் காறித்துப்பி விட்டேனே என்று குற்ற உணர்ச்சி கொண்டார். ஓடிப்போய் தனது துணியால் புத்தரின் முகத்தைத் துடைத்தார். அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கால்களில் விழுந்தார். அப்பொழுதுதான் புத்தர் கண்களைத் திறந்தார். வாயையும் திறந்தார். "நீங்கள் துப்பும் பொழுது எனது மனமும் துணுக்குற்றது ஆனாலும் நான் அதைக் கடந்து சென்றேன். உங்களிடம் எனக்குக் கோபம் இல்லை. உங்களுக்கும் இப்பொழுது என்மீது கோபம் இல்லை. நீங்கள் துப்பும்போது இருந்த புத்தரும் இல்லை. நீங்களும் இல்லை. எல்லாமே மாறிக்கொண்டிருக்கின்றன. ஒன்று இன்னொன்றாக உருவாகிக்கொண்டிருக்கிறது" என்று.......


மேற்படி கதையை இலங்கைத்தீவின் கடந்த ஏழாண்டு கால அனுபவத்துடன் பொருத்திப் பார்க்கலாம்.

**2009 மே மாதம் அளவில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொல்லும் போதிருந்த அதே சிங்கள பௌத்த மனோநிலை இப்பொழுது இல்லை என்று கூறத்தக்க தேரவாத பௌத்தர்கள் எத்தனைபேர் இந்த நாட்டில் உண்டு?**

கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் எல்லாவற்றிற்காகவும் அக்கொடுமைகளின் உச்சக்கட்டமாக நந்திக்கடற்கரையில் ஆயிரக்கணக்கில் தமிழ்மக்கள் கொல்லப் பட்டமைக்காகவும் குற்ற உணர்ச்சிகொள்ளும் தேரவாத பௌத்தர்கள் எத்தனைபேர் இச்சிறிய நாட்டில் உண்டு? இவ்வாறு கடந்த பல தசாப்தங்களாக தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக மன்னிப்பு கேட்பதற்கு எத்தனை சிங்களத் தலைவர்கள் தயாராகக் காணப்படுகிறார்கள்?

கடந்த 09ஆந் திகதி நாடாளுமன்றம் அரசியலமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டிருக்கிறது. சரியாக மூன்று மாதகால இழுபறிக்குப் பின் அவ்வாறு நாடாளுமன்றத்தை மாற்றுவதற்கான பிரேரணையின் முகப்புரை நீக்கப்பட்டதால் ஓர் உடன்பாடு எட்டப்பட்டிருக்கிறது. இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதும் அந்த முகப்புரையில் கூறப்பட்டிருந்ததே அதை நீக்குவதற்கான காரணமாகக் கருதப்படுகிறது. ஆயுதமோதல்கள் முடிவுக்கு வந்து எழு ஆண்டுகள் ஆனபின்னரும் சிங்களத் தலைவர்கள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்கப் போகிறோம் என்பதை பகிரங்கமாகவும், உத்தியோக பூர்வமாகவும் முகப்புரையில் கூறத் தயாரற்ற ஒரு நிலையே காணப்படுகிறது. மைத்திரி- ரணில் அரசாங்கத்திடம் அவ்வாறு கூறத் தேவையான அரசியல் திடசித்தம் இல்லை ஆயின் இறந்த காலத்திலிருந்து சிங்களத்தலைவர்கள் பாடம் எதையும் கற்கவில்லை என்றுதானே பொருள்? இறந்த காலத்திலிருந்து சிங்களத்தலைவர்கள் பாடம் எதையும் கற்கவில்லை என்றால் அவர்களுக்கு குற்றவுணர்ச்சி ஏற்படாது.

**அதாவது, சிங்கள அரசியல்வாதிகள், மதபீடங்கள், செயற்பாட்டாளர்கள், கருத்துருவாக்கிகள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள் போன்றோர் மத்தியில் குற்ற உணர்ச்சி ஏற்படாத வரையிலும் அல்லது அக்குற்ற உணர்ச்சியைத் தாண்டும் விதத்தில் இடைமாறுகாலகட்ட நீதிக்குரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத வரையிலும் இலங்கைத்தீவில் நல்லிணக்கத்தை அதன் மெய்யான பொருளில் கட்டியெழுப்ப முடியாது. அது மட்டுமல்ல அரசியலமைப்பு மாற்றங்களில் இனப் பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வையும் உருவாக்க முடியாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையல் சமையல்

## பாகற்காய், தக்காளி குழம்பு

**தேவையான பொருட்கள்**

பாகற்காய் - 250 கிராம், தக்காளிப்பழம் - 250 கிராம், வெங்காயம் - 5, பூண்டு – 10, வெந்தயம் - 2, மிளகாய் வத்தல் - 5, கறிவேப்பிலை – சிறிது, புளி - 25 கிராம், நல்லெண்ணெய் - 2 மே.கரண்டி, கடுகு, சீரகம் - 1 தே.கரண்டி, உப்பு - 1 தே.கரண்டி, மிளாகாய்த் தூள் - 2 தே.கரண்டி, நீர் - தேவைக்கேற்ப

**செய்முறை**




முதலில் பாகற்காயை கழுவி வட்ட வட்டமாக வெட்டவும். தக்காளியையும் கழுவி வெட்டவும். வெங்காயம் பூண்டு, மிளகாய் எல்லாவற்றை பொடியாக நறுக்கி வைக்கவும். புளியை நீரில் கரைத்து அளவாக எடுத்து வைக்கவும். அதன் பின் தாச்சியை அடுப்பில் வைத்து எணணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, சீரகம், கறிவேப்பிலை மிளகாய் போட்டு நன்கு வதக்கவும். வதங்கி பொன் நிறமாக வரும் போது பூண்டை சிறிது தட்டி அதனுடன் சேர்த்து வெந்தயத்தையும் போட்டு நன்கு கிளறிக் கொண்டே மிளகாய்த் தூள், உப்புதூள், கரைத்த புளி இவற்றையும் சேர்த்து கறியை நன்கு கிளறி மூடி 5 நிமிடம் வேக விடவும். பின்னர் வற்றியதும் நறுக்கிய தாக்காளியையும் சேர்த்து வேக விடவும். பின்னர் ஆறவிட்டு பறிமாறலாம். சோறு, பூரி, தோசை இவற்றுடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

## கொலஸ்ட்ரோலுக்கு என்ன காரணம்??

மனித உடல் கொலஸ்ட்ராலைத் தன்னிலிருந்தே உற்பத்தி செய்து கொள்கிறது. கல்லீரல் நாளொன்றுக்குச் சுமார் 1000 மில்லிகிராம்கள் வரை கொலஸ்ட்ராலை உற்பத்தி செய்கிறது. கல்லீரலும் மற்ற செல்களும் சேர்ந்து இரத்தத்தின் மொத்த கொலஸ்ட்ரால் அளவில் 75% உற்பத்தி செய்கின்றன.
25% கொலஸ்ட்ரால் நாம் உட்கொள்ளும் உணவு வகைகளான முட்டைக் கரு, மாமிசம், கோழியிறைச்சி, பால் மற்றும் பால் தயாரிப்புகளிருந்து கிடைக்கிறது.

இதற்கான காரணமாக அதிக அளவிலான கொழுப்புகள் கலந்த உணவுப் பழக்கம், அதிக மாமிச உணவு உண்பது, அதீத உடற்பருமன் (Obesity), உடல் இயக்கக் குறைவான பணிகள், உடற்பயிற்சியின்மை, அதிக தூக்கம், புகைப் பழக்கம், மன அழுத்தம், மதுப்பழக்கம், சக்கரைநோய், சிறுநீரகம் மற்றும் தைராய்டு சுரப்பி நோய்கள் மற்றும் கருத்தடை மாத்திரைகள் போன்றவற்றை கூறலாம். பெற்றோர்களுக்கு மிகை கொலஸ்ட்ரால் இருக்குமானால் அதற்கு காரணமான ஜீன்களை நீங்களும் பெற்றிருக்கக் கூடும்.





பொதுவாக இரத்தத்தில் அதிக அளவில் கொலஸ்ட்ரால் இருப்பதற்கான எந்த ஓர் அறிகுறியையும் ஏற்படுத்துவதில்லை. ஆகையால்தான் அது "அமைதியான உயிர்க்கொல்லி" என்று அறியப்படுகிறது. உடல் பருமன் இல்லாதவர்களுக்கு இரத்தத்தில் கொலஸ்ட்ரால் அதிகம் இருக்காது என்று சொல்ல முடியாது. யாருக்கும் வரலாம். இரத்த சோதனை செய்து பார்த்தால் தான் தெரிய வரும்.

அழகு குறிப்பு



## கண்களை பத்திரப்படுத்த ஆரஞ்சு போதுமானது...

காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கைக்குச் செல்லும் வரை கண்களின் பயன்பாடு முக்கியம். கணனியில் பணிபுரிவது, புத்தகம் வாசிப்பது, தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைப் பார்ப்பது என உறங்கும் நேரம் தவிர ஓய்வு கொடுக்காமல் கண்கள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. இதனால் கண்களுக்கு சோர்வு ஏற்பட்டு கண்களுக்கு கீழே கருவளையமும், நாளடைவில் சுருக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.
கண்களின் அழகிற்கு கீழ்க்கண்ட உணவுகள் முக்கியம். பால், பால் பொருட்கள், கீரை, முட்டை, மஞ்சள் மற்றும் ஆரஞ்சு நிறப் பழங்கள் மற்றும் காய்கள். போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டியதும் மிக முக்கியம்.
உடலுக்கு மட்டுமின்றி கண்களுக்கு பயிற்சி அவசியம்.



அதிகாலையில் குளிப்பது கண்களுக்கு புத்துணர்ச்சி தருவதோடு உடலுக்கு மேலும் அழகு சேர்க்கும்.
தலையில் தேங்காய் எண்ணெய் தேய்த்து விரல்நுனியால் நன்றாக மசாஜ் செய்யவும். இதனால் உடலுக்கு அதிக குளிர்ச்சி கிடைக்கும். உள்ளங்கையில் தேங்காய் எண்ணெயை ஊற்றி அதனை மோதிர விரலால் தொட்டு கண்களை சுற்றி வலதுபுறமாக சுற்றி மசாஜ் செய்யவும். இது ரத்த ஓட்டத்தை அதிகரித்து சோர்வை போக்கும்.
கண் வசீகரத்திற்கும், அழகிற்கும் ஆரஞ்சுப் பழம் பயன்படுகிறது. சிறிதளவு ஆரஞ்சு ஜூஸை ப்ரீஸரில் வைத்து அது ஐஸ் கட்டி ஆனவுடன், அதை மெல்லிய வெள்ளைத் துணியில் கட்டி, கண்ணுக்குமேல் ஒத்தி எடுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இப்படி செய்து வர, கண்கள் பளிச் ஆகிவிடும். மேலும் தூக்கமின்மையால் கண்களில் ஏற்படும் சோர்வை நீக்கி கண்களை பிரகாசமாக்கும் தன்மை ஆரஞ்சு பழத்திற்கு உண்டு.

# "கண் திறந்தே உறங்குகின்றோமா???"

பாகம் – 02

## உலக நீர் தினமும், சம்பூர் நிலக்கரி மின்நிலையத்தினால் எமக்கு ஏற்படவிருக்கும் நீர் வளப் பாதிப்புக்களும்




சு.சிவசங்கரன் M.Sc. (PDN)
முதுவிஞ்ஞானமாணி
ஒருங்கிணைந்த நீரியல்வள முகாமைத்துவம்

**கடந்தவார தொடர்ச்சி.....**

அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் வேளைகளில் நீர் மூலங்கள் மற்றும் நீர் வளங்களின் மீதான தாக்கங்கள் குறித்து முன்மொழியப்படுவதோ அல்லது விவாதித்துப் பரசீலிக்கப்படுவதோ அரிதாகவே காணப்படுகிறது.

சம்பூர் அனல் மின்னிலையத் திட்டம் அவ்வாறானதொன்றே. அபிவிருத்தியென்பது நீண்டகாலத்திற்கு நிலைத்து நிற்கக் கூடியவாறான சமூக, பொருளாதார மேம்பாடு எனலாம். அபிவிருத்தியானது பல படிமுறைகளையும், சூழற்றாக்கத்தை மிகவும் குறைக்கக் கூடியவாறான தந்திரோபாய முகாமைத்துவத்தையும் கொண்டிருப்பது அவசியமானதாகும். இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒரு ஜனநாயக அரசாங்கத்தின் அரசியற் பண்புமாகும்.

பொறுப்புணர்வற்ற அல்லது உடனடியான நன்மையை மாத்திரம் கருத்திற்கொண்ட பல்வேறு பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் மனித குலத்திற்கு விஷமாக அமைந்த வரலாறுகள் உண்டு. இந்தியாவின் போபால் விசவாயுக்கசிவு, ஜப்பானின் புகுசீமா அணுஉலை விபத்து, அமெரிக்காவின் கிங்ஸ்ரன் அனல் மின்நிலைய விபத்து என்பன அவற்றுட் சிலவாகும். சீனாவின் அபரிமிதமான தொழிற்சாலைகள் அதிகரிப்பினால் தற்போது 280 மில்லியன் மக்கள் பாதுகாப்பான குடிநீர் அருந்தமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நீருக்கான கொள்கையை வகுத்திருக்கும் எமது அரசாங்கம் அதை ஒரு சட்டமூலமாக இன்னமும் நிறைவேற்றாமலிருப்பது துரதிஷ்டவசமானதே.

இருப்பினும் அருகிவரும் வளமான நீர் வளத்தைப் பாதுகாப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

திருக்கோணமலை நீர் வளங்கள் மலிந்து காணப்படும் மாவட்டமாகும். இலங்கையின் பாரிய நதியான மகாவலிகங்கை எமது மண்ணை ஊடறுத்து வளங்கொழிக்க வைக்கின்றது. நுற்றுக்கணக்கான சிறிய, பாரிய குளங்கள் கமத் தொழிலைச் செழிக்க வைக்கின்றன. இந்நிலையில் இன்று பல்வேறு மட்டங்களில் பல்வேறு பரிமாணங்களில் உள்ளவர்களின் பேசும் பொருளாக திருக்கோணமலை மாவட்டத்தின் சம்பூர் பகுதியில் அமையவிருக்கும் நிலக்கரி மின்னுற்பத்தி நிலையம் இருக்கின்றது.

இவ் அனல் மின்னிலையம் 250 MW மின்னை உற்பத்தி செய்யும் 02 தொகுதிகளைக் கொண்டமையப்போகின்றது. இது சம்பூர் கிராமத்தில் கடலிலிருந்து 2.4 km தொலைவில் 540 ac விஸ்தீரணத்தில் அமையவிருக்கிறது. இதன் சூழல் தாக்க ஆய்வறிக்கையும் (EIA) வெளியிடப்பட்டுள்ளது. சம்பூரானது நீர், நில, இயற்கை வளங்கள் சம்பூரணமாக அமையப்பெற்ற வனப்பு மிக்க பழம்பெரும் கிராமமாகும். பாரிய அளவில் விவசாயம் நடைபெற்ற இடமாகும். சம்பூர் விவசாய போதனாசிரியர் பிரிவில் 1 பெரிய குளமும் 89 சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் அமையப்பெற்றிருந்தமை இதற்குச் சான்று பகர்கின்றது.

போரை ஓர் உடனடிக் காரண ஆயுதமாகப் பாவித்து சம்பூர் பகுதியிலிருந்த மக்களை 09 வருடங்களாக பல்வேறு சர்வதேச அரசியல் அழுத்தங்களுக்கும் மத்தியில் வெளியேற்றியிருக்கும் அரசாங்கம், இவ் அனல்மின் நிலையத்தை அமைத்துவிட கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 22

1. கடிகாரத்தில் கூர்ங்கோணத்தைக் காட்டும் நேரம் எது?
 1. 4.15 2. 12.30 3. 9.30

2. 0, 4, 5 எனும் இலக்கங்களைக் கொண்டு ஆக்கக் கூடிய மிகப் பெரிய எண்?
 1. 405 2. 540 3. 504

3. ஒரு பண்ணையில் வாத்துகளும், மாடுகளும் இருந்தன. அவற்றின் மொத்த கால்களின் எண்ணிக்கை 100 ஆகும். அங்கிருந்த மாடுகள் 20 எனின், எத்தனை கோழிகள் உள்ளன?
 1. 15 2. 10 3. 30

4. தொடர்ந்து பெய்த மழையின் காரணத்தினால் எமது கிராமம் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது கட்டுரை வரைக.

 1. ..........................................................................
 2. ..........................................................................
 3. ..........................................................................
 4. ..........................................................................
 5. ..........................................................................

5. ஒரு பப்பாசிப்பழம் ரூ. 108.00 எனின் ரூ. 1080 இற்கு எத்தனை பழங்கள் வாங்கலாம்?
 ..........................................................

6. பின்வரும் சிங்கள வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழ் மொழியில் எழுதுக.
 அ. மம அய்யா ..................................................
 ஆ. அ(த்)துல(ட்)ட என்ன ..................................................

7. மரபுத்தொடரின் கருத்தை எழுதுக
 1. வயிற்றைக்கலக்குதல் :- ..................................................
 2. காலைச்சுற்றுதல் :- ..................................................

8. சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
 அ. மோகன் / பாடசாலைக்கு / இன்று / சென்றான் / தந்தையுடன்
 ஆ. கேட்பது / தரும் / நல்லவர்களின் / நன்மை / அறிவுரைகளை

9. கட்டட வேலைகளின் போது மேற்பரப்பொன்றில் நேர்த்தன்மையைப் பரீட்சிப்பதற்கு பயன்டும் உபகரணம்
 i. மணியாசு ii. சாந்தகப்பை iii. பரப்புப்பலகை iv. மட்டக்கம்பு

10. உளியின் பயன்பாட்டிற்குத் தேவையான ஓர் உபகரணம்?
 i. ஆணி ii. பலகை iii. மரச்சுத்தியல் iv. வரைகம்பு

11. ஒரு வேளை உணவுக்குப் பொருத்தமான உணவுகளைக்கொண்ட உணவுத்தொகுதி
 i. இறைச்சி, சோறு, கீரை, வாழைப்பழம்
 ii. சோறு, மீன், இடியப்பம், பிட்டு
 iii. சோயா, இறைச்சி, சோறு, மீன்
 iv. குரக்கண், பலா, பாண், ஈரப்பலா

12. தேசப்படங்களில் புகையிரதப் பாதையை குறிக்கும் நிறம்?
 i. சிவப்பு ii. கறுப்பு iii. மஞ்சள் iv. நீலம்

13. புகையிரதம், சினிமா பற்றுச்சீட்டுக்களை முன்கூட்டிப் பதிவு செய்து கொள்ள அழைக்கவேண்டிய தொலைபேசி இலக்கம்
 i. 1199 ii. 1929 iii. 456 iv. 365

14. மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுக்கு பிரசித்தி பெற்ற இடம்?
 i. சீகிரியா ii. சிலைமனை iii. அம்பக்க
 iv. யாப்பகுவ



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## சிறுவர் முரசு




### சந்தனமா? சவுக்கா?

குறட்டி (பாம்பு) என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும், புலிகளும் கூட பயப்படும். குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது. மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில் பட்டது.

குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் மான் மீது இருந்தது. மான் சொல்லி வைத்ததுபோல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியில் கழுத்தில் மாலையாய் விழுந்தது. "அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டி ரப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றியது. மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"ஆமாம்.... ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது. "இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்" என்றது.



"நான் எப்படி உதவ முடியும்?" என்றது.

"பாறைக்குச் சென்று நாவல் பழங்களை எடுத்து என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு" என்றது மான்.

"நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்திரவாதம்?"

"நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா.. நாவல் பழங்களை என் தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு"

"நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன். என்னை சுமந்த படியே செல்ல வேண்டும்" என்று சொன்னது குறட்டி. அது அதற்கு ஒத்துக் கொண்டது. குறட்டியை சுமந்தபடியே சென்றது மான்.

பாறைக்குச் சென்று. நாவல் பழங்களை சேகரித்துக் கொண்டது. மான் தன் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்தது. தன் இருப்பிடத்தையும் படுத்துக்கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

அங்கு பதினைந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன. அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும் என எண்ணியது குறட்டி.

சற்று நேரத்தில் "என் கடமை முடிந்தது... எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன்.....உனக்கு எனது நன்றி" என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான்குட்டி.

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது.

**"செய்யும் நன்மை எம்மை தக்க தருணத்தில் காக்கும்"**

**சிந்திக்க:** கண்டனங்களை தாங்கிக் கொள்ளும் திடமனம் இல்லையென்றால் கடமைகளை நிறைவேற்ற முடியாது

**பாராட்டு பெறுவோர்**

இ.பாவனிரியா, 12 முருகன் கோவில் வீதி, திருகோணமலை

வ.சர்ஜிகன் 102அ, ஏகாம்பரம் வீதி, திருமலை



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.
வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

***அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159அ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.***

### நன்றி மறவாமை

தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பர். எனவே தான் நல்ல பழக்கவழக்கங்களை எல்லாம் நாம் சிறு வயது முதற் கொண்டு பழகி வருதல் அவசியமாகின்றது. நாம் எமக்கு உதவி புரிந்தவர்களுக்கு நன்றி உடையவர்களாக இருத்தல் வேண்டும். செய்த உதவியை மறத்தல் என்பது ஆகாத செயல் ஆகும். மற்றையவர் எப்படி இருந்தாலும் கவலை இல்லை நாம் சரியான பாதையில் செல்லல் வேண்டும். பெறப்பட்ட உதவி பெரியதோ! சிறியதோ! அளவில் இல்லை. நாம் நன்றி மறக்காமல் அவர்களுக்கு கைமாறு செய்தல் வேண்டும்.

*வர்ணகுலசிங்கம் சுவேதா*
*102சி, அன்புவழிபுரம், திருகோணமலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. C யை மையமாகக் கொண்ட வட்டம் ஒன்றின் ஒரு விட்டம் AB ஆகும். AD//CE ஆக இருக்குமாறு வட்டத்தின் மீது கோடு AB யின் ஒரே பக்கத்தில் D,E என்னும் புள்ளிகள் உள்ளன. இத்தகவல்களைக் காட்டும் பரும்படி வரிப்படத்தை வரைந்து.

(1) DCE = BCE எனவும்.
(2) ED, EB ஆகிய நாண்கள் சமம் எனவும்
(3) AE யினால் DAB இரு கூறிடப்படுகின்றது எனவும்
(4) E யில் வட்டத்திற்கு வரையப்பட்டுள்ள தொடலி நீட்டப்பட்ட AD யிற்குச் செங்குத்து எனவும் நிறுவுக.

02. சூத்திரம் $T = a + (n-1)d$ யில் n ஐ எழுவாயாக்குக.

03. சுருக்குக : $4a + 3b - 2a$ 04. சுருக்குக. $0.1 \times 0.1$

05. சமனிலி $2x + 1 < 6$ திருப்தியாக்கப்படுமாறு x எடுக்கத்தக்க நேர் நிறைவெண்கள் யாவை?

06. 1.25 மீற்றரை சென்றி மீற்றரில் தருக? 06. $A = \{a, e, i, o, u\}$ எனின் $n(A)$ யாது?

07. கமால் தனது இலாபத்தின் அரைப்பங்கை 14வீத எளிய வட்டி தரும் நிரந்தர வைப்பில் இருவார் எனின், 2 வருட முடிவில் அவருக்கு கிடைக்கும் வட்டி எவ்வளவு?

08. 3, 6, 12, 24 என்னும் பெருக்கல் விருத்தியில் 28ம் உறுப்பை m/ 36 எனும் வடிவத்தில் எழுதிக் காட்டுக.

## பாடம் : வரலாறு

01.



1. இதனை இனங்கண்டு இதன் பெயரை குறிப்பிடுக?
2 இது அமைந்துள்ள இடம் எது?
3 இது எம் மதத்தவருக்கு உரியது?
4 இதனை நிர்மாணித்த மன்னன் யார்?



02.
1 இப் படத்தில் இருப்பவரின் பெயர் யாது?
2 இவரது தாய்நாடு எது?
3 இவரது பயணத்தின் மூலம் நிருபணமான உண்மை எது?
4 இவர் கொலை செய்யப்பட்ட இடம் எது?



03.
1. படத்தில் காணப்படுவ யாது?
2 இது எக்காலத்திற்கு உரியது?
3 இது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
4 இதனை கட்டிய மன்னன் யார்?



04.
1. இவரின் பெயர் யாது?
2 இவர் பிறந்த நாடு?
3 இவரின் முக்கியமான கண்டுபிடிப்பு யாது?
4 இவர் சிறந்து விளங்கிய துறை எது?

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார் (N.C.A.T/ HNDA)
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

**Complete the following paragraph using the word give in brackets to from a word that fits the blank space .**

*The first one is done for you.*

We all love to see birds in their (1)......different...... (differ) range of colors. Recently a three day (2)..................... (exhibit) of photographs featuring birds was held in Galle. the title of it was 'The Feathers'. The young (3)......................... (photograph) who had organized it told us that he became a bird watcher quite unexpectedly.

His (4)............................... (curious) about birds turned into a love of bird - watching and then he had started to photograph them. the (5)............................... (select) on display showed how far and wide he had traveled. His photographing of birds had made him quite (6)..................................... (knowledge) about the birds and their habitats.

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

**இடைநிலை**

பகுபதங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் நிற்கும் இடைச் சொற்கள் இடைநிலை எனப்படும். அவை பெயரிடைநிலை, வினையிடைநிலை என இருவகைப்படும்.

அ) பெயரிடை நிலைகள் - இவை காலங்காட்டுவதில்லை
எடுத்துக்காட்டு: அறிஞன் (அறி+ஞ்+அன்)
ஓதுவான் (ஓது+ வ்+ ஆன்)
- வலைச்சி (வலை+ ச்+ சி)
- கலைஞன் (கலை+ ஞ்+ அன்)
- கவிஞன் (கவி+ ஞ்+ அன்)

ஆ) வினை இடைநிலைகள் தெரிநிலை வினைப் பகுபதங்களில் வரும் இடைநிலைகள் காலம்காட்டுவளவாய் அமையும். அந்த வகையில் அவை இறந்தகால இடைநிலை நிகழ்கால இடைநிலை எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

- இறந்த கால இடைநிலைகள் : த், ட், ற், இன், ன், இ
  - செய்தான்= செய்+ த்+ ஆன்
  - உண்டான்= உண்+ ட்+ ஆன்
  - தின்றான்= தின்+ ற்+ ஆன்
  - ஓடினான்= ஓடு+ இன்+ ஆன்
  - போனான்= போ+ ன்+ ஆன்
  - கூடியது= கூடு+ இ+ அ+ து
- நிகழ்கால இடைநிலைகள் : ஆநின்று, கின்று, கிறு



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**

ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

### இரசாயனவியல்

(b)

(1) போயிலின் விதியைக் கூறுக

(2) ஒரு பக்கம் மூடிய சீரான ஒடுங்கிய குழாயொன்றில் வளியானது 15 சென்றிமீற்றர் நீள இரச நிரலினால் அடைக்கப்பட்டுள்ளது. திறந்த வாய் மேலிருக்கத்தக்கதாக நிறுத்தும் போது வளி நிரல் நீளம் 30 cm ஆக இருந்தது. குழாயைக் கவிழ்த்தபோது அந்நிரல் நீளம் 45 cm ஆகியது. வளிமண்டல அமுக்கம்

(i) முதல் நிலையில் குழாயினுள் உள்ள வளியமுக்கம் யாது?
(ii) இரண்டாவது நிலையில் குழாயினுள் உள்ள வளியமுக்கம் யாது?
(iii) இதிலிருந்து வளிமண்டல அமுக்கத்தைக் காண்க.

(c) (1) சாள்சின் விதியைக் கூறுக.

(2) ஒரு வாயுவின் வெப்பநிலை $42^{\circ}C$ அதன் அமுக்கம் மாறாது இருக்க, கனவளவை இருமடங்காக்குவதற்கு அதனை எவ் வெப்பநிலைக்கு சூடேற்ற வேண்டும்?

**பகுதி 01**

01. சுவாலையொன்றின் வெப்ப நிலையை அளக்கப் பயன்படும் வெப்பமானி எது?
(1) டியற்றில் வெப்பமானி (2) இரச வெப்பமானி
(3) உயர் இழிவ வெப்பமானி (4) வெப்ப இணை வெப்பமானி

02. விசையை அளக்கப் பயன்படும் உபகரணம் எது?
(1) மும்மை கோல் தராசு (2) இரசாயனத்தராசு (3) விற்றராசு (4) இருகோல் தராசு

03. நியூட்டனின் 3ம் விதியுடன் மிகவும் பொருத்தப்பாடாயமைவது.
(1) மரத்திலிருந்து பழம் நிலத்தில் விழுதல்
(2) ஓடம் காரின் இயக்க திசை மாறுதல்
(3) கயிறு இழுத்து மரத்தில் கட்டுதல்
(4) மலையில் மேலிருந்து விழுந்து பின்னர் பந்து பின்னுதைத்தல்

04. மின் சாதனத்தின் வாற்றளவு குறிப்பது.
(1) சக்தியை உள்ளெடுக்கும் வீதம் (2) சக்தியை செலவிடும் வீதம்
(3) சக்தியை உருவாக்கும் வீதம் (4) மேற்கூறிய யாவும் பிழை

ஆசிரியர் . திரு.த.சேகரன் (B.Sc Agric (Hons))
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கப்பல்துறையில்...

போதிலும் கஞ்சாவிற்கும் ஏனைய போதைப் பொருட்களுக்கும் எதிராக இளைஞர்கள் போராடப் புறப்பட்டமையும் ஒரு காரணமாகத் தெரிகின்றது..

கடந்த 20ம் திகதி பாடசாலை விளையாட்டுத் திடலில் விளையாடிக்கொண்டிருந்த கிராம இளைஞர்கள் சிலரைக் போதையில் வந்த மற்றைய அணி தாக்கியதை அடுத்து இளைஞனொருவன் காயமடைந்து வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இத்தகவலைப் பெற்றுக்கொண்ட சீனன்குடா காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்ற போதும் எவரையும் கைது செய்யாமல் விட்டுச்சென்றிருந்தனர்.

21ம் திகதி மதியம் வைத்திய - சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் வீட்டிற்கு வருகை தந்தபோது தாக்கியவர்கள் போதையுடன் அவரது வீட்டிற்கு "மன்னிப்புக் கேட்கும் நோக்குடன்'' சென்றதாகவும் வீட்டிலிருந்தவர்கள் அச்சமடைந்து தம்மைத் தாக்கத் தொடங்கியதாகவும் காயமடைந்த சிலர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பிரச்சனை பெரிதாகியவுடனேயே காவல்துறை தலையிட்டதாகத் தெரிவித்த ஊரவர் ஒருவர் முதலாவது தாக்குதலின் போதே காவல்துறை சரியான நடவடிக்கையை எடுத்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்றும் தெரிவித்தார்.

தற்போது கிராமத்தில் அமைதி நிலவுவதாகவும் பாடசாலை விளையாட்டுத்திடல் பாடசாலையின் அதிபரால் மூடப்பட்டுவிட்டதாகவும் தெரிகின்றது..

கப்பல்துறைக் கிராமத்தில் கஞ்சா போதைப்பொருள் கடத்தல்கள் நடைபெறுவதும் கிராமத்தில் கஞ்சாவின் பாவனை அதிகரித்திருப்பதும் இதற்குக் காரணம் எனத் தெரிகின்றது.

அயல் கிராமமொன்றில் இருந்து கடல் வழியாகக் கடத்தப்படும் கஞ்சா கப்பல்துறையில் இருந்தே ஏனைய பிரதேசங்களுக்கு வினியோகிக்-கப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சேனைப்பயிர்ச்செய்கைக்காக காடுகள் அழிக்கப்பட்டுவரும் நிலையில் கஞ்சா கடத்தல் இலகுவாக நடைபெறுவதாகத் தெரிகின்றது.

### சம்பூரில் நீண்டகாலம்...

வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரி போராட்டம் ஒன்று நடைபெற்றது.

இதனையடுத்து, மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அனல்மின்நிலையத் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக சம்பூருக்கு விஜயம் செய்திருந்த மின்சக்தி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

எனினும், அனல்மின் நிலையமானது குடியிருப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் மக்களுக்கு நேரடியான தாக்கம் ஏற்படுமெனவும், இதனால் கடல்வளம், விவசாய நிலம் அனைத்தும் மோசமான பாதிப்புக்குள்ளாகுவதுடன் மக்களின் பொருளாதார வளத்தையும் சிதைவடையச் செய்யும் என சூழலியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

**கணனி வடிவமைப்பாளருக்கு வேலைவாய்ப்பு உண்டு**
**அனுபவம் தேவையில்லை**
**0777 555 738**

### இரண்டு பிரச்சனை...

எனத்.....................

தெரிவித்திருப்பதாக ஆதவன் செய்திகள் தெரிவிக்கின்றன.

அச் செய்திகளின் படி ஆரம்பத்தில் பல பிரச்சனைகள் ஏற்படும் எனத் தெரிவித்திருந்த அவர் பின்னர் இரு பிரச்சனைகள் மட்டுமே ஏற்படும் எனத் தெரிவித்திருப்பதாகச் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆதவன் செய்திகளின் படி - சம்பூர் அனல் மின்சார நிலையம் அமைக்கப்படின், அதனால் பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிவோம். எனவே, இது தொடர்பில் எமது மக்களுக்கு பாதகம் ஏற்படுத்தும் அளவுக்கு நாம் அனுமதிக்க மாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மேலும், நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை எதிர்த்தவர்களே, தற்போது அங்கு வேலை செய்து சந்தோ'மாக வாழ்கின்றனர். இருப்பினும், அங்கும் பிரச்சினை உள்ளதாகவும் அவர் கூறினார்.

திருகோணமலை, சம்பூர் பிரதேசத்தில் கடற்படை முகாம் இருந்த 177 ஏக்கர் காணியை இரண்டாவது கட்டமாக உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நடவடிக்கை இன்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "அனல் மின் நிலையம் தொடர்பிலும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பிலும் நான் விசாரித்துள்ளேன். இதனால், இரண்டு வகையான பாதிப்புகளே ஏற்படும்.

நிலக்கரியை எரிப்பதால் ஏற்படும் தூசியும் இதனால் பரவக்கூடிய சாம்பல் ஆகியனவே இப்பாதிப்புகளாகும். எனவே, இவ்வாறான தீமைகள் ஏற்படவும் எமது மக்களுக்கு அநீதி ஏற்படவும் நாம் ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம்.

சுற்றுப்புறச்சூழல் தொடர்பாக அரசாங்கத்துக்கும் எமக்கும் பல பொறுப்புகள் உள்ளன. இவ்விடயம் தொடர்பாக மீண்டுமொரு முறை சம்பூர் மக்களை நாம் சந்திப்போம். அப்போது மக்களின் கருத்துகள் தொடர்பிலும் நிபுணர்களின் கருத்துகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்படும்.

இவ்விடயம் தொடர்பாக அனைவரும் நிதானமாக சிந்திக்க வேண்டும்" எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார் என ஆதவன் செய்திகள் தெரிவித்துள்ளது.

### கடும் வெப்ப....

பருகுதல், சிறு பிள்ளைகளின் காலை நேர உடற்பயிற்சியை தவிர்த்தல், அடிக்கடி உடல் வெப்பத்தை தவிர்க்கும் முகமாக குளிர் நீர் கொண்டு மேல்கழுவல், நைலோன் மற்றும் வெப்பமேற்க் கூடிய ஆடை-களை அணியாதிருத்தல், உடலின் மேற்புற தோல் உட்பட வேறெங்கிலும் சிறு மாற்றங்கள் இனங்காணப்பட்டால் உடனடியாக வைத்திய உதவியை நாடுதல் வேண்டும் எனவும் வலியுறுத்தப்-பட்டுள்ளது.

### வடக்குகிழக்கு....

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப் படவுள்ள 65 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டத்தை நிராகரிக்கும் பிரேரணை கடந்த 24ம் திகதி வடமாகாண சபையில் நிறைவேற்றப் - பட்டுள்ளது.

### பொது சன உதவித்....

உத்தியோகத்தர்களும் உள்ளனர். 70 வயதை கடந்தவர்களின் கொடுப்பனவை உரியவருக்கு வழங்குவதில் பல தபால் அதிபர்கள் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளார்கள்.

சில தபாலகங்களில் கொடுப்பனவைப் பெறுபவர்கள் 10மக இற்கு அப்பால் இருந்தும் வருகை தரும் போக்குவரத்து வசதி அற்ற கிராமங்களும் உள்ளது. தினமும் கால் நடையாக தபாலகங்களிற்கு வந்து அலைந்து திரிவதையும், சிலர் பேருந்தில் வருகை தந்து கொடுப்பனவு வழங்கப்படாததால் திரும்பிச் செல்வதற்கு பணம் இல்லாமல் அலைந்து திரிவதையும் அவதானிக்க முடியும். கொடுப்பனவு உறுதிச் சிட்டைகள் கிடைத்தும் சில தபாலகங்களில் பணம் இல்லை என திரும்பி அனுப்புவதும் மதிய நேரத்திற்குப் பிந்தி வருபவர்களுக்கு நாளை வரும் படி அனுப்பி வைக்கும் உத்தியோகத்தர்களும் உள்ளனர்.

மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள், விதவைகள், விசேட நோய் உடையவர்களின் மாதாந்த கொடுப்பனவை (பிச்சைச் சம்பளம்) உரிய தினத்தில் வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### இடமாற்றத்தை...

நடைபெற்றது.

திருகோணமலை வலய கல்விப் பணிப்பாளர் என் .விஜேந்திரனிடம் பல குறைகளை கேட்டறிந்ததுடன் இரண்டு கிழமைகளுக்குள் ஆசிரியர்களை நியமிக்குமாறும் அங்கு நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்கள் அங்கு செல்ல மறுத்தால் கட்டாய விடுமுறையில் அனுப்புமாறும் உத்தரவிட்டார் .

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜே.எஸ்.டி .எம் அசங்க அபேவர்தன, மாகாண கல்வி பணிப்பாளர் எம். டி .எம் .நிஸாம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர் .எம்.அன்வர், குச்சவெளி பிரதேசத்திலுள்ள மூன்று பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குச்சவெளி அந்நூரியா மகாவித்தியாலயத்தின் முன்னால் மாணவர்களும் பெற்றோர்களும் ஆசிரியர் பற்றாக்குறையை கண்டித்து கடந்த புதன்கிழமை மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். கடந்த 3ம்திகதி தம்மால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது 16ம் திகதிக்கு முன்னர் பற்றாக்குறையாக வுள்ள ஆசிரியர் ஆளணியை நிவர்த்தி செய்து தருவதாக வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்கள் போக்குவரத்தைத் தடைசெய்து மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தினால் உடனடி நடவடிக்கைகளைக் காவல்துறையினர் முன்னெடுத்ததுடன் விடயம் மாகாண ஆளுனரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்தே இக் கூட்டம் அவரது தலைமையில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து வலயக்கல்வி அலுவலகத்தில் அவசரக் கூட்டமொன்று நடைபெற்றதுடன் திருகோணமலை நகரப்பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை உடன் இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

### சிறிலங்காவின்....

இன்றும் கூட சிறிலங்காத் தமிழ் இளையோர்கள் தமது உடல் உறுப்புக்களை இழந்து மனவடுக்களுடன் வாழ்வதைக் காணலாம். கடந்த இருண்ட யுகத்தின் போது தாம் பிறந்ததை நினைத்து இவர்கள் வருந்துகின்றனர். பிறிதொரு பிரிவினர் புகைப்பிடித்தல் மற்றும் தெருக்களில் செல்லும் பெண்களை கேலிசெய்தல் போன்ற கெட்ட பழக்கவழக்கங்களுக்கு ஆட்பட்டுள்ளனர் என்பதும் இங்கு வேதனையான விடயமாகும். போதைப் பொருட் பாவனையும் சிறிலங்காவின் முன்னாள் போர் வலயத்தில் தற்போது அதிகரித்துள்ளது.

இவ்வாறான பல்வேறு துன்பங்களுக்கு முகங்கொடுத்துள்ள தமிழ்ச் சமூகமானது, போருக்குப் பின்னான தற்போதைய சூழலில் இராணுவத்தினரின் பிரசன்னங்-களையும் தலையிட்டையும் சகித்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளனர் என பாகிஸ்தானிய நாளேடான டெய்லி டைம்ஸ் நாளேட்டிற்கு முபாசிர் நூர் என்ற சுதந்திர ஊடகவியலாளர் எழுதியுள்ளார்.

சிறிலங்காவின் உள்நாட்டு யுத்தமானது ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுற்ற போதிலும் இன்றும் இந்த நாட்டைப் பிரிக்கின்ற சமூகப் பிரச்சினைகளைக் காணலாம். சிறிலங்கா வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல்வேறு யுத்தக் குற்றங்களை மேற்கொண்ட சிங்களப் பேரினவாத அரசு மீது இன்றும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள் வெறுப்புடனேயே உள்ளனர்.

போரானது இரண்டு பத்தாண்டு-களுக்கும் மேலாக தொடர்ந்ததன் விளைவாக ஏற்பட்ட பல்வேறு வடுக்கள் மற்றும் உளப்பாதிப்புக்கள் போன்றன இன்றும் தமிழ் இளையோர்கள் மத்தியில் தாக்கத்தைச் செலுத்துகின்றன. இவர்கள் சிறிலங்காவின் பாதிக்கப்பட்ட தலைமுறையினராக வாழ்கின்றனர்.

சிறிலங்காவின் முன்னாள் படைவீரர்களை மலேசியாவிற்கு அழைத்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்துவது தொடர்பான மலேசியாவின் உள்விவகார அமைச்சின் திட்டத்தை எதிர்த்து மார்ச் 08, 2016 அன்று மலேசிய இந்திய காங்கிரசின் இளையோர் பணிப்பாளர் சிவராஜ் சந்திரன் தனது கண்டனத்தை வெளியிட்டிருந்தார். "ஏனெனில் இத்திட்டமானது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் உணர்வலைகளை மதிக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நீண்ட கால யுத்தத்தின் போது தமிழ்ப் பொது மக்களைப் படுகொலை செய்த சிறிலங்காப் படையினரைத் தமிழ் மக்கள் மிகத் தீவிரமாக வெறுக்கின்றனர்'' என சந்திரன் விளக்கினார்.

முறிவுற்ற சிறிலங்காவை ஒன்றிணைத்துப் பணியாற்றுவேன் என்கின்ற தேர்தல் வாக்குறுதியை மதித்தே கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் மைத்திரிபால சிறிசேன அதிபராகத் தேர்வு செய்யப்பட்டார்.

சிறிலங்காவில் வாழும் பௌத்த சிங்களவர்கள் ஆரியர்களின் வழித்தோன்றல்கள் எனவும் தமிழ் மக்கள் புராதன திராவிடர்களின் வழித்தோன்றல்கள் எனவும் கூறப்படுகின்றது. அன்றைய காலத்திலிருந்தே இவ்விரு சமூகத்தவர்களுக்கும் இடையில் முரண்பாடுகளும் முறிவுகளும் ஏற்படத் தொடங்கின. என அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இப்றாஹீம் நபியின் விவாதம்

## (அல் குர் ஆனின் விளக்கம்)

நான்தான் கடவுள் என்று கூறுபவனிடம் கடவுள் ஒருவன் இருக்கின்றான், அவன் ஆக்கவும், அழிக்கவும் ஆற்றல் பெற்றவன் என இப்றாஹீம் நபி கூறிய போது ஆணவம் கொண்ட அவன், ஆக்குபவனும் அழிப்பவனும் நானே என்று வாதிட்டான். அவனது இந்த வாதம் தவறானது.

என்றாலும் தொடர்ந்து அதில் வாதித்துக் கொண்டிருக்காமல் அவனால் பதில் கூற முடியாத 'ருபூபிய்யத்' – அல்லாஹ்வின் இறைமையுடன் தொடர்புபட்ட ஒரு அம்சத்தை இப்றாஹீம் நபி கையில் எடுத்தார்கள். 'எனது இறைவன் சூரியனைக் கிழக்கில் இருந்து கொண்டு வருகின்றான். நீ அதை மேற்கில் இருந்து கொண்டு வா பார்க்கலாம்!' என்றார்கள். அல்லாஹ்வின் பண்புகளில் குதர்க்கம் புரிந்த இறை மறுப்பாளனால், இதில் குதர்க்கம் புரிய முடியாமல் போனது. வாயடைத்துப் போனான்.



இந்த நிகழ்ச்சி மூலம் இப்றாஹீம் நபியின் பிரச்சார அணுகுமுறை, துணிச்சல், வாதத் திறமை, வாத முறை, நம்ரூத் மன்னனின் ஆணவம் போன்ற பல அம்சங்களைப் புரிந்து கொள்ளலாம்.

முற்றும் .. ..

– இஸ்மையில் ஸலஃபி –

# ஜெபம்

சகோதர சகோதரிகளே! இறந்தோரைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் எதிர்நோக்கு இல்லாத மற்றவர்களைப் போல் நீங்களும் துயருறக் கூடாது. இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகிறோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். -1 தெசலோனிக்கர் 4:13-14.

### மோட்சம் நரகம் உண்டா? அது எப்படிஇருக்கும்?

மோட்சம் நரகம் கட்டாயம் உண்டு. ஏனெனில் இறுதித் தீர்ப்பின்போது கடவுள் நல்லவர்களுக்கு முடிவில்லா வாழ்வையும் தீயவர்கள் தண்டனைக்கும் உள்ளாவர் என்பதை சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த மோட்சத்தையும் நரகத்தையும் நாம் கற்பனை செய்து பார்க்க இயலாது. நல்லவர்கள் கடவுளோடு அமர்ந்து, கடவுளை என்றும் நேரடியகப் பார்க்கும் முடிவில்லா மகிழ்ச்சி நிலையைப் பெறுவர். தீயவர்களோ கடவுளைக் காண இயலா பெரும் துன்ப நிலையை அடைவர். அதிலிருந்து அவர்களால் மீள இயலாத துன்ப நிலை.இவைகளை மனித கற்பனையாக எப்படி வேண்டுமானாலும் சித்தரிக்கலாம்.

பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து," என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "சபிக்கப் பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். .......

தொடரும் ..

www.bible.me




# இவ்வார இராசி பலன்

**மேஷம்** : மனதில் பலநாள் இருந்த கவலை நீங்கும். பணிகள் குறித்த காலத்தில் நிறைவேறும். எதிரிகள் விலகிச் செல்வர். கடன்களை செலுத் துவீர்கள். உடல்லாரோக்கியம் பலம்பெறும். பணவரவு நன்றாக உண்டு.

**ரிஷபம்** : செயல்களில் நிதானமும், திட்டமிடுதலும் இருந்தால் வெற்றி உறுதி. எதிர்ப்பாளரால் தொந்தரவு இருக்காது. சேமிப்பு கூடும். விற்பனை அதிகரித்து லாபம் கூடும். பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்கக் கூடாது.

**மிதுனம்** :புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். வழக்கு, விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, பெறுவர். மாணவர்கள் தேர்வுகளில் சிறப்பான தேர்ச்சி அடைவர்.

**கடகம்**:வாழ்வில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். வியாபாரம் செழிக்க சிறந்த வாய்ப்பு கிடைக்கும். பணியாளர்கள் பாதுகாப்பில் உரிய அக்கறை கொள்ளவும். .

**சிம்மம்**:திட்டமிட்ட முயற்சி நிறைவேற தாமத மாகலாம். சிலர் மீது அதிருப்தி இருந்தாலும் வெளிக்காட்ட வேண்டாம். எதிரிகள் இடைஞ் சல் செய்தாலும் சமாளித்து விடுவீர்கள்.

**கன்னி**: நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பொது இடங்களில் எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். வெகுநாள் இருந்த பிரச்சினையின் தீவிரம் குறையும்.

**துலாம்** : எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். விற்பனை செழித்து லாபம் கூடும்.

**விருச்சிகம்**:பிறர் தரும் வாக்குறுதியை நம்பி செயல்களில் ஈடுபட வேண்டாம். உங்க ளைப் பற்றி தெரியாதவர்களிடம் முக்கிய பிரச்சினைகள் பற்றி சொல்ல வேண்டாம்.


**தனுசு** :வெகுநாள் திட்டங்களை செயல்படுத்த வாய்ப்பு தேடி வரும். வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிவர்.

**மகரம்** :முக்கியமான பணி சிறப்பாக நிறைவேறும்.உடல்நிலை நன்றாக இருக்கும். வியாபாரம் செழித்து தாராள பணவரவு கிடைக்கும். கலைகளில் நாட்டம் உண்டாகும்.

**கும்பம்**:கடந்தகால நற்செயலுக்கு புகழும், நன்மையும் தேடி வரும். வாழ்க்கைத் துணை செல்வ வளம் பெருக உதவி செய்வார். வியாபாரத்தில் வளர்ச்சி பெருகும்.

**மீனம்** : சுய திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். பொது இடங்களில் தேவை யின்றி பேசுவதை தவிர்க்க வேண்டும். கடன், நோய் தொந்தரவு குறையும்.

# காணல் நீர்



ஆனால் மீரா மட்டும் தனது எதிர்காலக் கணவர் வசந்தன் வந்து நிற்கின்றாரே அவருக்கு ஏதும் ஆகிடுமோ என்ற பரபரப்பில் நிம்மதி இழந்தவளாக காணப்பட்டாள். அவள் நிலையைப் புரிந்து கொண்ட அண்ணன் குமரன், சரி நான் போய் பார்த்து வாரன் அவரை, என புறப்பட்டான் ..

கொஞ்சம் தூரம் போவதற்குள் சேதி வருகிறது, வசந்தன் வந்து கொண்டிருக்கும் போது குண்டு வீழ்ந்ததில் அந்த இடத்திலேயே அகால மரணம் என.... குடும்பமே ஸ்தம்பித்து நிற்கிறது.

மீரா சிரித்த இறுதி சிரிப்பு அது. இன்று உயிர் இருந்தும் நடைப்-பிணமாய், இன்னொருவர் உதவியுடன் வாழ்கிறாள்! அவளின் கல்யாண வாழ்க்கை காணல் நீரானது. அத்துடன் முடிந்ததா இல்லை.

இவர்கள் எல்லோரையும் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்த குமரன், இறுதியாக முக்கிய ஆவணங்கள் எடுக்க வீட்டுக்குப் போனவன் திரும்பி வரவே இல்லை. இறந்த தடயமும் இல்லை எங்கே என்ற சேதியும் இல்லை. இப்பவும் அம்மா அப்பா அலைந்து திரிகிறார்கள் மகனைத்தேடி...

அவலம் நிறைந்த தமிழின சரித்திர காலம் அது.. எத்தனை குடும்பங்களை புரட்டிப்போட்டது .எத்தனை இழப்புகள், அத்தனையும் வடுக்களாய் இன்றும், கண்ணில் கசிந்த கண்ணீரை துடைத்தபடி நிகழ்காலத்திற்கு வருகிறாள் ஈஸ்வரி.

மீராவை அழைத்துச் சென்று குளிப்பாட்டி .உணவு ஊட்டி விட்டவர், ஆண்டவா நான் இருக்கும் வரை என் கண்மணியை பார்ப்பேன். அதன் பின்? போதும் உன் சோதனை பெண்பிள்ளை சீக்கிரம் குணமாக அருள்புரி. பிரமை பிடித்திருக்கும் மகளை அணைத்தவாறே கண்ணீர் உகுத்தாள் அன்னை.

அன்று அந்த குடும்பம் இருந்த மகிழ்வு, ஊர்க்கண்ணே பட்டிடும் அளவுக்கு. மீராவிற்கு கிடைத்த வாழ்வு இருந்தது. ஐயகோ அத்தனையும் இன்று கானல் ஆனதே.......

இறைவா எமக்கு மட்டுமா எம்மினத்திற்கே என்று விடியுமோ மௌன அலறல் அந்த பாவப்பட்ட அன்னையிடமிருந்து.... கண்ணனுக்காய் காத்திருந்தாள் அந்த மீரா. வசந்தனின் இழப்பால் உணர்வற்று இருக்கின்றாள் இந்த மீரா.

முற்றும் ...

– – கவிச்சுடர் சிவரமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

கதிரவன்




## அமரர் பிரபாகரன் திலக்சனின் ஞாபகார்த்த முக்கோண துடுப்பாட்ட போட்டி





திருகோணமலை யங் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழகம் அமரர் பிரபாகரன் திலக்சன் ஞாபகார்த்தமாக முக்கோண துடுப்பாட்ட போட்டி ஒன்றினை நடத்தியுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை 22.03.2016 காலை 8.30 மணிக்கு இதன் அங்குரார்ப்பணை போட்டி ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதல் போட்டியில் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்தை எதிர்த்து டைனமிக் கழகம் மோதியது.

பிரபாகரன் திலக்சன் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் சிறந்த துடுப்பாட் வீரரும், உதைபந்து வீரரும் ஆவார். இவர் கடந்த வருடம் 22.03.2015ல் துபாயில் கப்பலில் தொழில் செய்து கொண்டிருந்த போது கடலில் அகால மரணத்தை தழுவிக் கொண்டார். அவரது ஞாபகார்த்த போட்டியாகவே இது இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடரில் யங் ஒலிம்பிக்ஸ் கழகத்துடன் ஸ்பென்ஸ் விளையாட்டுக் கழகம், டைனமிக் விளையாட்டுக் கழகம் என்பன பங்கு கொண்டன. இறுதிப்போட்டி 17.04.2016 அன்று நடைபெற்றது.



## மீண்டும் சர்ச்சைக்குள் மாட்டிய பாகி. அணி தலைவர் அப்ரிடி

கிரிக்கட்

மொகாலியில் நடந்த உலகக்கிண்ண டி20 லீக் ஆட்டத்தில் பாகிஸ்தான் 22 ஓட்டங்களால் நியூசிலாந்திடம் தோற்றது. இந்தப் போட்டி முடிந்த பிறகு பாகிஸ்தான் அணியின் தலைவர் அப்ரிடி கூறுகையில், காஷ்மீரை சேர்ந்த மக்கள் நிறைய பேர் இங்கு வந்து எங்களுக்கு ஆதரவு தெரிவித்தனர். அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். அதேபோல் முந்தையப் போட்டிகளில் எங்களுக்கு ஆதரவு அளித்த கொல்கத்தா ரசிகர்களுக்கும் நன்றி கூறிக் கொள்கிறேன் என்று கூறினார்.

அப்ரிடியின் இந்த கருத்து பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. இதற்கு இந்திய கிரிக்கெட் வாரிய செயலாளர் அனுராக் தாகூர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## தோல்வியடைந்தார் செரினா
### பட்டங்கள் பெற்றனர் அஸரெங்கா, ஜோக்கோவிச்

டென்னிஸ்

இடம்பெற்றுவரும் பி.என்.பி பரிபஸ் பகிரங்க டென்னிஸ் தொடரின் (இந்தியன் வெல்ஸ்) தொடரின் பட்டங்களை விக்டோரியா அஸரெங்காவும் நொவக் ஜோக்கோவிச்சும் கைப்பற்றினர்.

பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான ஐக்கிய அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், 6-4, 6-4 என்ற செட் கணக்கில் உலகின் பதினைந்தாம் நிலை வீராங்கனையாகவிருந்த பெலாரஸ் வீராங்கனையான விக்டோரியா அஸரெங்காவிடம் தோல்வியுற்றார். இப்போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் தரவரிசையில் எட்டாம் இடத்துக்கு விக்டோரியா அஸரெங்கா முன்னேறியுள்ளார்.

ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச், 6-2, 6-0 என்ற செட் கணக்கில் உலகின் பன்னிரண்டாம் நிலை வீரரான கனடாவின் மிலஸ் ராவோனிச்சை தோற்கடித்தார். இது, நொவக் ஜோக்கோவிச்சின் 27ஆவது மாஸ்டேர்ஸ் பட்டமென்பது குறிப்பிடத்தக்கது.



## பெண் வீராங்கனைகளுக்கும் சம ஊதியம்

டென்னிஸ்


உலகின் முதல்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச், ஆண்கள் விளையாடும் போட்டிகளுக்கு அதிகளவிலான பார்வையாளர்கள் வருவதன் காரணமாக, பெண்களை விட ஆண்களுக்கு, அதிகமான ஊதியம் கிடைக்க வேண்டுமென எண்ணுவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, அதிக விமர்சனங்களைச் சந்தித்திருந்தார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள இரண்டாம் நிலை டென்னிஸ் வீரரான பிரித்தானியாவின் அன்டி மரே, அனைவருக்கும் அவரவர் கருத்தைக் கொண்டிருப்பதற்கு உரிமையுள்ளது என்றார். எனினும் அதன் பின்னர், ஜோக்கோவிச்சின் கருத்துக்கு விமர்சனங்களை முன்வைத்தார். குறிப்பாக, பெண்கள் விளையாடுவதைப் பார்வையிடு வதற்குக் குறைவான பார்வையாளர்களே வருகிறார்கள் என்ற கருத்தை அவர் நிராகரித்தார். செரினா வில்லியம்ஸ் விளையாடும் போது, ஏராளமானோர் பார்வையிட வருவதாக அவர் தெரிவித்தார். தற்போதைய நிலையில், கிரான்ட் ஸ்லாம் போட்டிகள் நான்கும், இந்தியன் வெல்ஸ், மியாமி போன்ற போட்டிகளும், பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம பரிசுத்தொகையை வழங்கும் நிலையில், ஏனைய போட்டிகளும் சமமான பரிசுத் தொகையை வழங்க வேண்டுமெனத் தெரிவித்தார்.



## விளம்பரதாரரும் கைவிட்டனர் ஷரபோவாவை

டென்னிஸ்



டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா ஆஸி. ஓபன் டென்னிஸ் போட்டிகளுக்கான ஊக்க மருந்து சோதனையில் தோல்வியடைந்திருப்பதாக தெரிவித்ததையடுத்து அவருக்கு வழங்கிவந்த ஆதரவை 3 பெரிய நிறுவனங்கள் விலக்கிக்கொண்டுள்ளன.

ஊக்கமருந்து சோதனையில் தோல்வியடைந்ததால் தடையை எதிர்நோக்குகிறார் ஷரபோவா.

ஜேர்மனியின் சொகுசு கார் நிறுவனமான போர்ஷ், சுவிட்சர்லாந்து நாட்டின் கடிகார நிறுவனமான டேக் ஹொய, நைகி ஆகிய நிறுவனங்கள் தங்கள் விளம்பரத் தூதர் பதவியிலிருந்து ஷரபோவாவை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளன.

## ஒரு ஓட்டத்தினால் தெரிவானது – இந்தியா

கிரிக்கட்



கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில், இந்தியாவின் பாண்டியா ஓவரை வீச, இந்த ஓவரில் 2 பவுண்டரிகள் பறக்க அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களும் வீழ கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் பெற்றால் பங்களாதேஷிற்கு வெற்றி என்ற நிலையில், ஒரு ஓட்டத்தையேனும் பெற்றுக்கொண்டால் போட்டியை சமநிலையில் முடித்துவிடலாம் என்ற எண்ணத்தில், பந்து மட்டையில் படாமலேயே சுவக்தா ஓட, சிறப்பாக செயற்பட்ட டோனி ரன் அவுட் மூலம் முஸ்தபிஸுரை ஆட்டமிழக்கச் செய்து 2 ஓட்டங்களால் இந்தியாவிற்கு வெற்றியைத் தேடித் தந்தார்.


இந்த வெற்றியுடன் இந்திய அணி தனது அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்துக்கொண்டது. பங்களாதேஷ் அணிக்கோ தொடரிலிருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குகிழக்கு வீடமைப்புத் திட்டத்தில் நிதி மோசடி???

## நாடாளுமன்றில் அனுர குமார திசநாயக்க...

## வடமாகாணசபையும் நிராகரிப்பு



**யு**த்தத்தால் இடம்பெயர்ந்த வடக்குகிழக்கு மக்களுக்காக முன்னெடுக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத விவகார அமைச்சின்கீழ் முன்னெடுக்கப்படவுள்ள இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வீட்டை நிர்மாணிப்பதற்காக 21 இலட்சம் ரூபா செலவிடுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்திருந்தது

இரு வருட நிவாரணக் காலத்துடன் பகுதி பகுதியாக பணத்தைச் செலுத்தவும் அரசிற்கு குறித்த நிறுவனம் வாய்ப்பு வழங்கியுள்ளதாக அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார். இந்நிலையில், இந்த வீடமைப்புத் திட்டத்தில் நிதி மோசடி இடம்பெறுவதற்கான சாத்தியம் உள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடா அனுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் நேற்று கூறினார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்தினால் அரசாங்கம் சுமார் 65 ஆயிரம் மில்லியன் ரூபா மேலதிக செலவை சுமக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அதேவேளை இவ்வீட்டுத்.....

பக் 17

## சட்டவிரோத மீன்பிடி

### மீனவர்கள் கைது

**தி**ருகோணமலை கடற்படைத்தளக் கடற்பரப்பில் சட்ட விரோத மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 17 மீனவர்களை கடற்படையினர் கடந்த 22.03.2016 மதியம் கைது செய்தனர்.

இவர்கள் திருகோணமலை துறைமுக காவல்துறையிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்கப்பட்டனர்

கதிரவன்



## கடும் வெப்ப நிலை எச்சரிக்கை

**சூ**ரியக் கதிரின் வீச்சுத் தன்மையின் செறிவு காரணமாக மத்திய கோட்டிற்கு அண்மையில் அதுவும் இலங்கை மற்றும் மாலைதீவு பிரதேசங்களில் அதி உச்ச வெப்ப நிலையாக 30 பாகை செல்சியஸ்"க்கு மேல் எதிர்வரும் நாட்களில் நிலவலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதனைத் தவிர்க்கும் முகமாக காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை தேவையற்ற பயணங்களைத் தவிர்த்தல், தினமும் 3 லீற்றருக்கு குறையாது தண்ணீரைப்.....

பக் 17

## காவல்துறை வீரர்கள் தினம் திருமலையில் அனுட்டிப்பு


கதிரவன்





**இ**லங்கை காவல் திணைக்களத்தின் 152வது காவல்துறை வீரர்கள் தினம் கடந்த திங்கட்கிழமை 21.03.2016 நாடு தழுவிய ரீதியில் பிரதான காவல் நிலையங்களில் அனுட்டிக்கப்பட்டது.

திருகோணமலை காவல் பிரிவுக்கான நிகழ்வு திருகோணமலை தலைமையக காவல் நிலையத்தில் நடைபெற்றது. பிரதம காவல் பரிசோதகர் வசந்த குமாரசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டத்துக்கான பிரதி காவல் மா அதிபர் மெக்காட்டி பெரேரா அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.




## "பொதுசன மாதாந்த உதவிப்பணத்தை வழங்க அசண்டையீனம்"

### முதிய மக்கள் கடும் அசௌகரியம்

அச்சுதன்

**பொ**துசன உதவித் தொகைக்கான நிதி மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் மாவட்டங்களில் உள்ள ஒவ்வோறு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்புவதில் ஏற்படும் காலதாமத்தால் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவைப் (பிச்சை சம்பளம்) பெறும் மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள், விதவைகள், விசேட நோய் உடையவர்களின் மிகுந்த சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மாதாந்த உதவிப் பணம் அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் தவிர்த்து மாற்றுத் திறனாளிகள், விதவைகள் விசேட நோயாளர்கள், 70 வயது மேற்பட்டவர்களுக்கு பிரதேச செயலகங்களின் ஊடாக, தபாலகங்களில் மாதாந்தம் வழங்கப்படும் கொடுப்பனவாகும்.

ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதிக்கு முதல் 15 ஆம் திகதி வரை கொடுப்பனவுகள் தபாலகங்களில் வழங்கப்படும் வகையில் கொடுப்பனவு உறுதி சிட்டை பிரதேச செயலகங்களால் அந்தப் பகுதி தபாலகங்களிற்கு வழங்கப்படும்.

கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்காக கொடுப்பனவு பெறுபவர்கள் அவர்களின் பெயர் இடப்பட்ட அட்டையை சமர்ப்பித்து மாதாந்த கொடுப்பனவை ரூபா 250 முதல் 2000 வரை பெற்றுக் கொள்வார்கள்.

நடைமுறையில் பிரதேச ஒதுக்கீடு செயலகங்களினால் உரிய காலப்பகுதியில் வழங்கப்படுவதில்லை.

அவர்கள் கூறும் காரணம் சமூக சேவைத் திணக்களங்களினால் இன்னும் ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. ஆகையால் உரிய தினத்தில் கொடுப்பனவு உறுதி சீட்டுகளை வழங்க முடியாதுள்ளது என தெரிவிக்கின்றனர்.

இந்த கொடுப்பனவை பெறுபவர்களில் எண்பது வீதமானவர்கள் நோயாளிகள்,......

வயதானவர்கள் உதவிப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு ஒரு உதவியாளருடன் தான் வர முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள். தினமும் தபாலகங்களிற்கு வந்து அலைந்து திரிவதையும் அங்கு அமர்ந்து செல்வதையும் அவதானிக்க முடியும்.

ஒரே மாவட்டத்தில் செயற்படும் பிரதேச செயலகங்கள் வெவ்வேறு தினங்களில் கொடுப்பனவு உறுதி சிட்டைகளை வழங்கி வைப்பார்கள். சில தபாலகங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட பிரதேச செயலகங்களின் மத்தியில் அமைந்துள்ளது. வெவ்வேறான தினங்களில் வழங்கப்படுவதால் அங்கும் பொது மக்கள் அலைந்து திரிவதை அவதானிக்க முடியும்

தபாலகங்களில் கொடுப்பனவுகள் மேற் கொள்ளும் போது கொடுப்பனவு பெறுபவர் நோயாளிகள். 70 வயதை கடந்தவர்கள், கை நாட்டு வைப்பவர்கள் உரியவரால் வர முடியாத விடத்து கொடுப்பனவை பெற்றுக் கொள்வதற்காக அடுத்தவரின் பெயர் கொடுப்பனவு உறுதி சீட்டிலும் அவர்கள் கொண்டு வரும் அட்டையிலும் பிரதேச செயலகத்தினால் அனுமதி வழங்கப்பட வேண்டும். அதனை உத்தியோகத்தர்கள் சரியாக நடைமுறைப்படுத்துவதில்லை. இதனால் தபாலகங்களில் தவறான கொடுப்பனவுகள், மோசடிகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இந்த கொடுப்பனவுகள் மூலம் தமது வேலைகளை இழந்த அரச.....

பக் 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 26.03.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.